Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 26, 2022

திங்கட்கிழமை, டிசெம்பர் 26, 2022 | ஒளி: 08 கதிர் 172 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தவும்



சுனாமி பேரலை அனர்த்தம் இடம்பெற்று இன்றுடன் (டிசெம்பர் 26) ஆம் திகதியுடன் 18 வருடங்கள் பூர்த்தியாகின்றன. தொடர்ச்சி P2

## மண்மேடு சரிந்து விழுந்ததில் சகோதரியும் சகோதரனும் பலி

### சகோதரர்கள் படுகாயம்: தாய்,தந்தை தப்பினர்



கண்டி, அக்குறணை - துனுவில பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்துள்ளனர்.

கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் 18 வயதான சகோதரியும் மற்றும் 16 வயதான சகோதரனுமே உயிரிழந்துள்ளனர் என கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2



## மண்சரிவு அபாயம்

நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

கண்டி, குருணாகல்,மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு மாவட்டங்களிலும் வசிக்கும் மக்கள் மண்மேடு சரிந்து வீழ்தல், கற்பாறைகள் சரிந்து வீழ்தல், உள்ளிட்ட விடயங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது. தொடர்ச்சி P2



## கண்டி ரயில் நிலையம் வெள்ளத்தில் தத்தளித்தது



கனமழை காரணமாக கண்டி ரயில் நிலையம் வெள்ளத்தில் மூழ்கியது. இதனால், கண்டி ரயில் நிலையத்தின் ஊடான சகல ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டன.

இதனிடையே பிலிமத்தலாவை மற்றும் பேராதனை ரயில் நிலையங்களுக்கு இடையிலான தண்டவாளத்தில் மண்சரிந்து விழுந்துள்ளதுடன் தொடர்ச்சி P2

# மத்தியஸ்தம் இல்லாத பேச்சில் பலன் இல்லை

இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஏதாவது ஒரு நாட்டின் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதில் எந்த பலனும் இல்லையென தெரிவித்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இது வெறுமனே காலத்தை கடத்தும் செயல்பாடாகும் என்றார்.

புதிய ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை நோக்கிய அறிவிப்பு அல்லது முன்மொழிவை அவர் பல இடங்களில் கூறி இருக்கிறார். அவர் கூறுவதற்கு சர்வதேச நாடுகளுடைய அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம் என்றும் கூறினார்.

மன்னாரில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (25) ஊடங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேச நாடுகளுடைய உதவி இல்லாமல் இலங்கையால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாது. ஆகவே சர்வதேச நாடுகளை திருப்தி படுத்துவதற்கு நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த முன் மொழிவை முன் வைக்கக் கூடும். ஆனால் என்னைப் பொருத்தவரையில் முதலில் தமிழ் கட்சிகள், வடக்கு கிழக்கில் இருக்கின்ற மத தலைவர்கள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் வரைவு தொடர்பாக தீர்வு திட்டம் தொடர்பாக ஒவ்வொரு விதமாக கதைப்பது என்பது அவர்களது கட்சிகள் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று கதைக் கின்றார்களோ தெரியாது. தொடர்ச்சி P2



## நிர்வாணப் படங்களை பெற்று பாலியல் இலஞ்சம் பெற முயன்றவர் சிக்கினார்

அழகான பெண்களின் நிர்வாணப் புகைப்படங்களை பெற்று, அப்பெண்களிடம் பாலியல் இலஞ்சம் பெற முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர், ஹங்குரன்கெத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இவர், நீர்ப்பாசன வடிகாலமைப்பு சபையில் பணிபுரிகின்றார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2




## ஜன.5க்கு முன்னர் திகதி குறிக்கப்படும்

2023 ஜனவரி ஐந்தாம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடத்தப்படும் திகதி குறித்து அறிவிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

டிசெம்பர் மாத இறுதியில் தேர்தல் நடத்தப்படும் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கெனவே தெரிவித்திருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. தொடர்ச்சி P2



## 309 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

சிறைச்சாலைகளிலுள்ள 309 கைதிகளுக்கு விசேட பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நத்தார் விசேட பொதுமன்னிப்பின் அடிப்படையில் இந்த 309 பேரும் விடுதலை செய்யப்பட்டனர் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். விடுதலை செய்யப்பட்ட 309 கைதிகளில் 306 ஆண்களும் 3 பெண்களும் உள்ளடங்குகின்றனர். தொடர்ச்சி P2

## பெருந்தோட்ட காணிகள் பறிபோகும் அபாயம்

### வேலுகுமார் எம்.பி எச்சரிக்கை



"பெருந்தோட்ட காணிகள் பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பதற்கு அவசியமான முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்." என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. அதில் பிரதானமானதாக ஜனாதிபதியின் தலைமையிலான உணவு பாதுகாப்பு தொடர்ச்சி P2

## மின்னல் தாக்கத்தில் 27 கால்நடைகள் கருகின



■ எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) அதிகாலை பாரிய மின்னல் தாக்கம் ஏற்பட்டது. தொடர்ச்சி P2

## ஷாப்டர் படுகொலை 75 பேரிடம் சாட்சியம்

பிரபல தமிழ் வர்த்தகரான தினேஷ் ஷாப்டர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் 75 பேரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவ்வாறு சாட்சியங்கள் பெற்றுக்கொண்டவர்களில் குடும்ப உறுப்பினர்களும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சி P2

## புலிகளை தமிழ்நாட்டில் புதுப்பிக்க ஐ.எஸ்.ஐ முயற்சி

சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத கடத்தல்களை மேற்கொண்டதாக கூறப்படும் இலங்கையர்கள் ஒன்பது பேர் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டதை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பில் பல்வேறான செய்திகள் வெளிவருகின்றன. தொடர்ச்சி P2

## சேது சமுத்திர திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவும்

ராமர் பாலம் இருந்தது என்பதற்கான ஆதாரங்களே இல்லை என மத்திய பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) அரசாங்கம் அறிவித்துவிட்ட நிலையில் சேது சமுத்திர திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வலியுறுத்தி உள்ளார்.

தமிழ்நாட்டின் ராமேஸ்வரம், இலங்கையின் மன்னார் இடையே சுண்ணாம்பு கற்களால் ஆன மேடுகள் அமைந்துள்ளன. குறைந்த ஆழத்தில் இருக்கும் இந்த சுண்ணாம்பு மேடுகள் ஒரு பாலம் போல காட்சி தருகின்றன. இதனை புராண இதிகாசமான ராமாயணத்துடன் இணைத்து, கடவுள் ராமரால் சீதையை மீட்க கட்டப்பட்ட ஒரு பாலம் என நம்பப்பட்டது.





ராமர் கட்டியதுதான் இந்த பாலம் என்பதற்கான சான்றுகளும் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் ராமர் பால விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது. அதாவது தமிழகத்தின் மிக நீண்டகால கோரிக்கை சேதுசமுத்திர கால்வாய் அமைக்க வேண்டும் என்பதுதான். தொடர்ச்சி P2

### இலங்கை மற்றும் மாலைதீவில் 5 வருட

## சமுத்திர பிளாஸ்டிக் குறைப்பு செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் USAID

இலங்கை மற்றும் மாலைதீவில் கைத்தொழிற் துறையில் பிளாஸ்டிக்கின் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் ஊடாக சுற்றுச்சூழலில் பிளாஸ்டிக்கின் அளவைக் குறைப்பதற்கான ஒரு திட்டமிடப்பட்ட 5 ஆண்டுகால செயற்திட்டத்தை இலங்கை மற்றும் மாலைதீவில் உத்தியோகபூர்வமாக தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மண்மேடு சரிந்து விழுந்ததில் சகோதரியும் சகோதரனும் பலி

சம்பவத்தின் போது வீட்டில் தாய், தந்தை மற்றும் ஏனைய சகோதரர்கள் என ஐந்து பேர் இருந்தனர். சகோதரனும் சகோதரியுமே மரணமடைந்துவிட்டனர்.

எனினும், மண் மேட்டின் கீழ் விழுந்து படுகாயமடைந்த சகோதரர்கள், கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், இந்த அனர்த்தத்தில் தாய் மற்றும் தந்தைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கண்டி ரயில் நிலையம் வெள்ளத்தில் தத்தளித்தது

நதனுஓயா ரயில் கடவைக்கு அருகில் மண் மேடு சரிந்துள்ளதன் காரணமாக மலையகத்துக்கான ரயில் சேவைகளுக்கு தடை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து கண்டி வரை செல்லும் ரயில் பிலித்தலாவை வரை மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. கண்டி மற்றும் மஹியாவ ரயில் நிலையங்களுக்கு இடையிலான தண்டவாளத்திலும் மண் மேடு சரிந்துள்ளது.

இந்நிலையில் பதுளையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (25) முற்பகல் 10.15 மணிக்கு கொழும்பு கோட்டைக்கு புறப்படவிருந்த ரயில் மற்றும் கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து பிற்பகல் 12.40 நானுஓயா நோக்கி புறப்படவிருந்த ரயில் என்பன சீரற்ற காலநிலை காரணமாக இரத்துச் செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நிர்வாணப் படங்களை பெற்று பாலியல் இலஞ்சம் பெற முயன்றவர் சிக்கினார்

விமானப் பணிப்பெண் ஆட்சேர்ப்பு நிறுவனம் என்ற போர்வையில், இணைய வழியூடாக நேர்முகப் பரீட்சை நடாத்தியே பெண்களிடம் இவ்வாறு சேஷ்டை விடுவதற்கு முயன்றுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாத்தளை மற்றும் கண்டி பிரதேசங்களைச் சேர்ந்த இரு யுவதிகள் முறைப்பாடு செய்துள்ளனர். இதற்கமைய மேற்கொண்ட விசாரணையின் போது அவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருடன், இந்த மோசடிக்கு பயன்படுத்திய நான்கு கையடக்கத் தொலைபேசிகள், 13 சிம் அட்டைகள் மற்றும் ஒரு கணனியும், கண்டி, கணினி மோசடி விசாரணைப் பிரிவின் நிலைய அதிகாரி, பொலிஸ் பரிசோதகர் சதுரி திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட கணினியில், இருபதுக்கும் மேற்பட்ட இளம் பெண்களின் நிர்வாணப் புகைப்படங்கள் காணப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர், பெண் ஒருவர் போல் நடித்து, 'பெண்களின் பிரச்சினைகள்' என்ற பெயரில் சுமார் இரண்டு வருடங்களாக முகப்புத்தப் பக்கம் ஒன்றின் ஊடாக, இளம் பெண்களுக்கான அழகு தொடர்பான ஆலோசனைகள், தொழில்வாய்ப்புக்கள் மற்றும் நடிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கும் குழுக்களின் தொடர்பை ஏற்படுத்தித் தருவதாகவும் கூறியுள்ளார்.

இதற்கிடையில், விமானப் பணிப்பெண் ஆட்சேர்ப்பு என்று குறிப்பிட்டு முகப் புத்தகக் கணக்கில் இளம் பெண் ஒருவரின், பெயர் மற்றும் தொலைபேசி இலக்கத்தையும் பதிவிட்டுள்ளார். அத்துடன், தகைமைகளை பரிசீலிப்பதற்கு நிறுவனத் தலைவரைத் தொடர்புகொள்ளுமாறு, வேறொரு தொலைபேசி

> **சந்தேகநபர் சுமார் இரண்டு வருடங்களாக முகநூல் ஊடாக இளம் பெண்களை ஏமாற்றி வந்துள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது**

இலக்கத்தைக் குறிப்பிட்டு முகப்புத்தகத்தில் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார்.கு

இதன்படி, நிறுவன தலைவராக, சந்தேக நபரால், அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளீர் என்று கூறி, விரல்கள், நகங்கள், கால்கள், முடி மற்றும் முகம் ஆகியவற்றின் தனித்தனி புகைப்படங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, உடலில் தழும்புகள் உள்ளதா என்று பார்ப்பதற்கும், உடலின் புகைப்படங்களைப் பார்ப்பதற்கும் தனது பெண் அதிகாரிக்கு நிர்வாண புகைப்படங்களை அனுப்புமாறும் இறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவித்தலின் பின்னர் அநேகமான இளம் பெண்கள் விமானப் பணிப்பெண்ணாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் குறித்த பெண் அதிகாரியின் தொலைபேசி இலக்கத்துக்கு நிர்வாண புகைப்படங்களை அனுப்பியுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. அதன்பின்னர் அந்த புகைப்படங்களில் உள்ள இளம் பெண்களை பயமுறுத்தி பாலியல் இலஞ்சம் பெற முயற்சித்துள்ளார். மேற்படி சந்தேகநபர் சுமார் இரண்டு வருடங்களாக முகநூல் ஊடாக இளம் பெண்களை ஏமாற்றி வந்துள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் சிக்கியுள்ள யுவதிகளைத் தேடி மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ஜன.5க்கு முன்னர் திகதி குறிக்கப்படும்

"எவ்வாறாயினும், சிற்சில காரணங்களினால் தேர்தல் குறித்த அறிவிப்பை சில நாட்களுக்கு ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது" என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 14 நாட்களின் பின்னர் வேட்புமனு கோரப்படும் என்றார்.

"இந்நிலையில், எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னதாக தேர்தல் குறித்து அறிவிக்கப்படாத விடத்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என ஃபவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## மத்தியஸ்தம் இல்லாத பேச்சில் பலன் இல்லை

என்னை பொருத்தவரையில் தமிழர்களுடைய தீர்வு என்பது ஒட்டுமொத்த கட்சிகளும் முதலில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பிற்பாடு அரசியல் யாப்பில் எப்படிப்பட்ட மாற்றங்கள் கொண்டு வந்தால் தமிழர்கள் இறைமையுடன் வாழ முடியும் என்ற ஒரு வரைபிற்கு வர வேண்டும். ஏனெனில் 1948 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியாளர்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஒப்பந்தங்கள் செய்யப்பட்டது. அவை கிழிக்கப்பட்டது. இந்திய இலங்கை ஒப்பந்தங்கள் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே வெறுமனே இலங்கை அரசாங்கத்துடன் பேசி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

குறிப்பாக சர்வதேச நாடுகள் உடைய மத்தியஸ்தம் குறிப்பாக இந்தியா அமெரிக்கா அல்லது பிரித்தானியா இந்த மூன்று நாடுகளைச் சார்ந்த ஏதோ ஒரு நாடுகள் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை செய்வது என்பது காலத்தை கடத்துகின்ற செயலாகத்தான் இருக்கும். அந்த பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களுக்கு உரிய இறைமை உடன் வாழக்கூடிய தீர்வு வரும் என்பது எனக்கு நம்பிக்கை இல்லை என்றார்.

## 309 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு



இதனிடையே, உறவினர்களை சந்திப்பதற்கு கிறிஸ்தவ மத கைதிகளுக்கு மாத்திரம் நத்தார் தினமான ஞாயிற்றுக்கிழமை (25) அனுமதி வழங்கப்படவுள்ளது.

கைதிகளின் உறவினர்கள் கொண்டுவரும் உணவு ஒரு கைதிக்கு மாத்திரம் போதுமானதாக இருக்க வேண்டும் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நத்தார் தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளில் திருப்பலி ஒப்புகொடுக்கப்படவுள்ளதுடன் கரோல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஷாப்டர் படுகொலை 75 பேரிடம் சாட்சியம்

படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட தினேஷ் ஷாப்டரின் குடும்ப உறுப்பினர்கள் தெளிவுபடுத்தும் வகையில் ஆதாரங்களை பதிவு செய்துள்ளனர் என்றார்.

கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இந்த விசாரணைகளின் படி சாட்சியங்களை பெற்றுக் கொண்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## மின்னல் ...

இதனால் ஏறாவூர் -றஹ்மானியா பாடசாலை வீதி எட்டாம் ஒழுங்கையிலுள்ள இஸ்மாயில் அன்வருக்கு சொந்தமான கால் நடைகள் கருகி சாம்பலாகியுள்ளன.

அதில், 9 ஆடுகள், 11 கோழிகள், 4 சேவல்கள், 3 வாத்துக்கள் அடங்குகின்றனர். அத்துடன், குறித்த பகுதிகளிலுள்ள பலரின் வீட்டு மின்சாரப் பொருட்களும் சேதமடைந்துள்ளன.

## பெருந்தோட்ட காணிகள் பறிபோகும் அபாயம்

வேலை திட்டம் அமைந்திருக்கின்றது. இத் திட்டத்தின் பின்னணியில் பெருந்தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத காணிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பாக பேசப்படுகின்றது. இந்நிலையில் பெருந்தோட்ட காணிகள் எமது மக்களிடம் இருந்து பறிபோகும் அபாய நிலை தோன்றியுள்ளது. இதனை தடுப்பதற்கான பொருத்தமான வேலை திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

உணவு பாதுகாப்புக்காக பிரதேச செயலக மட்டத்திலே குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அப்பிரதேச செயலக பிரிவில் பயிரிடப்படாது இருக்கின்ற காணிகளை இனம் காண்பதற்கும் அவற்றை தேவையுடையோருக்கு பகிர்ந்தளிப்பதற்கும், அக்காணிகளில் பயிரிடுவதற்கு அவசியமான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது என்றார்.

பெருந்தோட்டங்கள் காணப்படும் பகுதிகளில் அங்கு காணப்படும் பயிரிடப்படாத நிலங்களும் பகிரப்படவுள்ளது. இதன் போது பெருந்தோட்ட காணிகள் வெளியாருக்கு பகிர்ந்தளிப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளது. இந்நிலைமையை தடுக்க முன்கூட்டியே நாம் செயற்பட வேண்டும். பெருந்தோட்ட காணிகளின் பகிர்வு தொடர்பாக விசேட பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாது பிரதேச அரசியல்வாதிகளிடம் இந்நிகழ்ச்சித்திட்டம் ஒப்படைக்கப்பட்டால் அது பாரிய சிக்கலை ஏற்படுத்துவதாக அமையும் என்றும் குறிப்பிட்டார். .

## சமுத்திர ...

ஆரம்பிப்பதை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) அறிவிக்கிறது.

*Research Triangle International (RTI)* தலைமையிலான இச்செயற்திட்டத்தின் கூட்டமைப்பானது, கட்டமைப்புமுறைகளில் காணப்படும் வினைத்திறனின்மை மற்றும் தூய்மையான பிளாஸ்டிக் மீது தங்கியிருக்கும் பகுதிகளை இலக்குவைத்துச் செயற்படுவதற்கு உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுகிறது. திண்மக்கழிவு முகாமைத்துவம் மற்றும் அவற்றைக் குறைக்கும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதை அதிகரித்தல் மூலம் ஆயிரக்கணக்கான தொன் பிளாஸ்டிக் சுற்றுச்சூழலுக்குள் கசிவதைத் தடுப்பதே திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்காகும்.

கடல் குப்பைகள் ஆகிய இரண்டையும் முகாமை செய்வதற்குத் திணறிக் கொண்டிருக்கிறது.

## சேது சமுத்திர திட்டத்தை உடனடியாக...

வங்க கடலில் பயணிக்கும் கப்பல்கள் இலங்கையை சுற்றித்தான் சென்னை உள்ளிட்ட துறைமுகங்களுக்கு வந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ராமர் பாலம் பகுதியை ஆழப்படுத்தினால் சுமார் 400 கிலோ மீற்றர் கடல்வழி, சுமார் 30 மணிநேர பயண செலவு குறையும். இதுதான் சேது கால்வாய் திட்டமாகும்.

ஆனால், ராமர் பாலத்தின் பெயரால் தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு அடிநாதமாக திகழ்ந்திருக்க வேண்டிய சேது கால்வாய் திட்டம் முடக்கப்பட்டது. இந்த சர்ச்சையின் போது ராமர் என்ற ஒரு கடவுள் இருந்தாரா? அவர் பாலம் கட்ட எந்த பொறியியல் கல்லூரியில் படித்தார்? என ஆவேசமாக கேள்வி எழுப்பினார் மறைந்த முதுபெரும் திராவிடர் இயக்க தலைவரும் முன்னாள் முதல்வருமான கருணாநிதி.

இதற்காக அவரது தலைக்கு விலை நிர்ணயித்து தலையை வெட்ட சொன்னது இந்துத்துவா கோஷ்டி. பின்னர் நீதிமன்ற தலையீடுகளால் சேது சமுத்திர கால்வாய் திட்டம் முடங்கிவிட்டது.

இந்த நிலையில் ராஜ்யசபாவில் பா.ஜ.க., எம்.பியான கார்த்திகேய சர்மா, ராமர் பாலம் தொடர்பாக அறிவியல் ரீதியான ஆய்வு நடத்துவது குறித்து கேள்வி எழுப்பினார். இதற்கு மத்திய அமைச்சர் ஜிதேந்திர பிரசாத் பதிலளிக்கையில்,

ராமர் பாலம் தொடர்பாக விண்வெளி துறையினர் ஆய்வு நடத்தினர். ராமர் பாலம் என்பது சுமார் 18,000 ஆண்டுகளுக்கு முந்தையது என்கிற நம்பிக்கை உள்ளது. ராமர் பாலம் எனப்படும் பகுதியை செயற்கைக்கோள் படம் பிடித்தது. இந்த செயற்கைக்கோள் படங்களின் அடிப்படையில் ராமர் பாலம்தான் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றார்.

இதனை சுட்டிக்காட்டி திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ராமர் பாலமே இல்லை என மத்திய அரசு அறிவித்துவிட்டது. அதனால் இனியேனும் சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடாது என்பதற்காகவே பா.ஜ.க.வினர் சேது சமுத்திர திட்டத்தை முடக்கி வைத்தனர். தற்போது மத்திய அரசு ராமர் பாலமே இல்லை என அறிவித்துவிட்டது. இதனால் தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகள், பொதுமக்கள் இணைந்து சேது கால்வாய் திட்டத்தை கொண்டு வரவேண்டும். இதற்கான அனைத்து தரப்பு மக்களும் இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்றும் வீரமணி கோரிக்கை விடுத்துள்ளார்.

## 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தவும்

இதனை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் நினைவு தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இன்று (26) காலை 9.25 லிருந்து 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ம் திகதி காலையில் சுனாமி நாட்டை தாக்கியது. இதில் சுமார் 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். சுனாமி ஏற்பட்டதன் பின்னர் 2005ம் ஆண்டில் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

இதன்படி அனர்த்தங்களை முன்கூட்டியே அறிவித்தல், அனர்த்தங்களின் போது பாதிப்புக்களை குறைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## புலிகளை தமிழ்நாட்டில் புதுப்பிக்க ஐ.எஸ்.ஐ முயற்சி

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழ்நாட்டில் தற்போது புதுப்பிக்க பாகிஸ்தான் புலனாய்வு சேவை (ஐஎஸ்ஐ) முயற்சிப்பதாக இந்திய செய்தி வெளியிட்டுள்ளது.

தென்னிந்திய மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சியைத் தூண்டுவதற்கு பாகிஸ்தானின் புலனாய்வு சேவை (ISI) முயற்சித்து வருவதாக இலங்கையின் ஊடகமொன்றினை மேற்கோள் காட்டி இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சியை ஏற்பட்டுத்துவதற்காக, சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத கடத்தல்களை மேற்கொண்டதாக கூறப்படும் ஒன்பது இலங்கையர்களை இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரகம் (NIA) இந்த வாரம் ஆரம்பத்தில் கைது செய்திருந்தது.

இதனையடுத்தே, குறித்த இலங்கை ஊடகம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பது முதல் ஜம்மு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத குழுக்களை ஆதரிப்பது வரை, இந்தியாவில் அமைதியை சீர்குலைக்க இந்தியாவுக்கு எதிரான சக்திகளை பாகிஸ்தான் ஆதரித்து வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானை தளமாகக் கொண்ட போதைப்பொருள் மற்றும் ஆயுத கடத்தல்காரரான ஹாஜி சலீமுடன் இணைந்து இலங்கையர்களான குணசேகரன் மற்றும் புஷ்பராஜா ஆகியோரால் கட்டுப்படுத்தப்படும் இலங்கை போதைப்பொருள் மாஃபியாவின் நடவடிக்கைகள் அதனுடன் தொடர்புடையது என இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரகம் தெரிவித்துள்ளது.

தென்னிந்தியாவில் பயங்கரவாதத்தை தோற்றுவிக்க பாகிஸ்தான் முயற்சிப்பது இது முதல் முறையல்ல. 2014 ஆம் ஆண்டில் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் கட்டுப்பாட்டில் இருந்த ஓர் அமைப்பை தேசிய புலனாய்வு முகவரகம் கண்டுபிடித்துள்ளது. இலங்கையில் உள்ள பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகராலயம் தமிழ்நாட்டில் சில செயற்பாட்டாளர்களை கண்காணித்ததுடன் அவர்கள் தாக்குதலுக்காக பல இலக்குகளை உளவு பார்த்தனர் என்பதையும் அந்த நேரத்தில் இந்திய உளவுச் சேவை கண்டுபிடித்துள்ளது.

தற்போது தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை புதுப்பித்து, பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை சீர்குலைக்க பாகிஸ்தான் புலனாய்வு சேவை முயற்சிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர்களை தேசிய புலனாய்வு முகவரகம் கைது செய்திருந்ததுடன், ஐரோப்பாவில் உள்ள சிலருடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளான டென்மார்க் மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள இந்த செயற்பாட்டாளர்கள், விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சிக்கு பயன்படுத்த பணத்தை ஈட்ட முயற்சிப்பதாக பின்னர் தெரிய வந்தது.

இந்த நிலையில், தமிழ் தேசியத்தை பயன்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிக்க, பாகிஸ்தான் புலனாய்வு சேவை, கிராமப்புறங்களை குறிவைத்து வருவதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

# நான் அறிந்த சின்ன சிங்கப்பூர்



பா.கனகேஸ்வரி
(ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்)

**மலைகளுக்கு குறைவு இல்லாமலும், மழைக்கு பஞ்சம் இல்லாமலும், குளிர் காற்றின் ஸ்பரிசத்தை தினம் தினம் உணர்ந்து வாழ்ந்த மலையக மண் இலங்கையின் ஒரு பகுதி அது. தேயிலைச் செடிகளும், பசுமையும் மட்டுமே எங்கு திரும்பினாலும் கண்களுக்கு தென்படும் அழகிய இடம் எங்களின் சொந்த ஊரும் தான்.**

பனிக்கூட்டத்தையும் ,மலர் கூட்டத்தையும் மலையகத்தாயையும் என்னால் மறந்து விட முடியாது என்பது உண்மைதான். ஆனால், இதிலிருந்து முற்றிலும் ஒரு மாறுபட்ட சூழலில் வாழ நேரிடும் என்று நான் ஒருபோதும் நினைத்ததே இல்லை. கல்லூரி படிப்பு நிறைவுற்றதும் பட்டப்படிப்பின் தொடர்ச்சியாய் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு செல்ல அனுமதி கிடைத்தது. சந்தோசம் ஒருபுறமும், பயம் மறுபுறமும் இருந்த போதிலும் தந்தையுடன் என் பயணம் மலையகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்தது.

ஊரில் இருந்து வர, மனதில் ஏதோ மிகப் பிடித்த ஒன்றை விட்டுப் பிரியும் உணர்வு வந்த போதிலும், கலங்கிய கண்களை நானாகவே துடைத்துக் கொண்டது அன்று சற்று ஆச்சரியமாகவே இருந்தது எனக்கு. எட்டு மணித்தியாலய பேருந்து பயணத்திற்கு பின்னர், யாழ்ப்பாணம் வந்தடைந்தோம்.

முதல் முதலில் யாழ் நகரில் நான் வந்த அந்த நாள் இப்போதும் நினைவில் இருக்கிறது. வாழ்க்கையில் முதல் முறை அதிக நேர பேருந்து பயணம் என்பதால் உடல் சற்று களைத்திருந்த போதிலும், மாபெரும் யாழ் நகரைக் கண்டதும் பாதை தெரியாமல் விழித்தது மறக்கவே முடியாது.

முச்சக்கர வண்டி ஒன்றில் பல்கலைக்கழக விடுதிக்கு வந்து சேர்ந்தவுடன், தந்தையின் கைகள் என்னை இறுகப்பற்றிக் கொண்டன. ஆயிரம் ஆறுதல்கள், அறிவுரைகள் எல்லாம் காதில் கேட்டுக் கொண்டே இருந்த போதிலும், மனதின் போராட்டம் மட்டும் குறையவே இல்லை . கண்ணீரோடு பட்டப்படிப்பை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தந்தையின் வேண்டுகோளுக்காய் விடுவிக்குள் நுழைந்தேன். முதல் நாள் யாழ்ப்பாணம் என்றால் என் எண்ணங்களுக்கும், நான்கு வருடங்களுக்கு பின்னர் யாழ்ப்பாணம் என்ற என் எண்ணத்திற்கும் மாபெரும் வேறுபாடு உண்டு. விடிந்தால் தேயிலைச் செடிகளையும், மலைகளையும், சூரியனின் வருகையில் பனித்துளிகள் சுமந்த பூக்களையும் காண்பதும் இல்லாமல் போய், எங்கும் பசுமையான வயல்வெளிகளும், அழகிய கடல்களும் , கண்டல் தாவரங்களும் மணற்தரைகளும் கண்களில் தென்பட்டன.

மலையகத்தில் கோயில்கள் என்றால் பெரும்பாலும் மரத்தடிகளிலும், கற்களிலும் சிறிய வடிவில் பார்த்து பழகிய நினைவுதான்எனக்கு. ஆனால், யாழ்ப்பாணத்தில் கோயில்களை கண்டால் பக்தியை விட பிரமிப்பை முதலில் ஒட்டிக்கொண்டது. எங்கேயாவது ஓரிரு வேப்ப மரங்களை காண்பதே மலையகத்தில் அரிதாக இருக்கும். ஆனால், தெருமுழுவதும் வேப்ப மரங்களை சாதாரணமான ஒன்றாக பார்க்க சற்று ஆச்சரியமாக உணர்ந்தேன். இதெல்லாம் ஒரு விடயமா?

> **மலையகத்தின் குளிர்மையில் இருந்து விடுபட்ட நாங்கள். அதிக வெயில் காலங்களில் வாழ பழகி கொள்ள ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் சற்று கடினமாக இருந்தது**

> **உணவு முறையில்தான் எத்தனை வேறுபாடுகள். எல்லோரும் இருப்பது ஒரே நாட்டில் தான். என்றாலும், உணவு முறையிலும் வேறுபாடுகள்**

> **மலையகம் என்ற மாற்றான் தாய் பிள்ளைகள் என்று எண்ணாமல் மடி மீது எம்மை சுமக்கும் யாழ் மண்ணின் செல்ல பிள்ளைகள் நாங்கள். உண்மையில் யாழ்ப்பாணம் என்பது எல்லா வளங்களும் நிறைந்த இலங்கையின் சின்ன சிங்கப்பூர் தான்**

என்று உங்கள் மனங்களில் தோன்றுவது எனக்கு புரிகிறது. ஆனால், யாழ்ப்பாணத்திற்கு முதல் முதலாய் வந்த வெளி மாவட்ட மாணவர்கள் அனைவருக்கும் இது மிகப்பெரிய ஆச்சர்யம் தான்! வளைந்து, நெளிந்த மலைப்பாதைகளையும், மண் பாதைகளையும், ஒற்றையடி பாதைகளையும், யாழ்ப்பாணத்தில் காண்பது மிகக் குறைவு. நேரான பாதைகளில் எத்தனையோ கிலோமீட்டருக்கு அப்பால் செல்லும் வாகனங்கள் கூட கண்களுக்குத் அழகிய ஊர்வலமாய் தெரியும்.

இவை மட்டுமா ? உணவு முறையில்தான் எத்தனை வேறுபாடுகள். எல்லோரும் இருப்பது ஒரே நாட்டில் தான். என்றாலும், ஒவ்வொருவரின் உணவு முறையிலும் பல்வேறுபட்ட விருப்பு முறைகள் இருப்பதை யாழ்ப்பாணம் வந்து தான் தெரிந்து கொண்டேன்.

அதிகாலையில் கோதுமை மா ரொட்டியும், சோறும் என்று பெரும்பாலும் நகர்ந்தது மலையக வாழ்க்கை. பிட்டு எப்போதாவது வீடுகளில் சமைக்கும் ஒரு உணவுதான். அப்படி பார்த்து வளர்ந்து விட்ட எனக்கு யாழ்ப்பாணத்தில் பிட்டு தேசிய உணவாக இருந்தது. எப்படி சாப்பிட முடியும்? என்ற கேள்வியை மனதிற்குள் எழுப்பியது . எனக்கு மட்டுமல்ல வடமகாணம் தவிர்ந்த எல்லோரும் இதை பெரும்பாலும் யோசிக்கவே செய்வார்கள். அந்தப் பிட்டின் சுவை என்பதை பல்வேறு விதமான கறிகளுடனும், பழங்களுடனும், பார்த்ததும் சுவைத்ததும் யாழ்ப்பாண நண்பர்களின் உணவில் தான். பிட்டும், சீனியும் மட்டுமே இப்போதும் மலையகத்தில் பலருக்குத் தெரிந்த உணவு. ஆனால், பிட்டோடு நண்டுகறி, இறால்குழம்பு, மீன் பொரியல், கருவாட்டுக் குழம்பு போன்ற கறிகளும் , வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் போன்ற

> **பல்கலைக்கழக விடுதிக்கு வந்து சேர்ந்தவுடன், தந்தையின் கைகள் என்னை இறுகப்பற்றிக் கொண்டன. ஆயிரம் ஆறுதல்கள், அறிவுரைகள் எல்லாம் காதில் கேட்டுக் கொண்டே இருந்த போதிலும், மனதின் போராட்டம் மட்டும் குறையவே இல்லை . கண்ணீரோடு பட்டப்படிப்பை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தந்தையின் வேண்டுகோளுக்காய் விடுவிக்குள் நுழைந்தேன்**

பழங்களும் பருப்பு, சாம்பார் தேங்காய் சம்பல், முட்டை பொரியல், கத்தரிக்காய் பொரியல் என்று ஒரு உணவை பல்வேறு சுவையோடு நாங்கள் சுவைத்ததும் யாழில் தான். சோறு என்றால் கூட எங்களுக்கு தெரிந்ததெல்லாம் வெள்ளை அரிசி சோறு தான். ஆனால், இங்கு குத்தரிசி சோறும் கூட்டுக்கறியும் மரவள்ளி பொரியலும் மறக்க முடியாத உணவாகி போனது. இவை மட்டுமா? வேர்க்கடலை, மாம்பழங்களின் வகைகள், பினாட்டு, பருத்தித் துறை வடை, வேப்பமரத்தின் பூவினால் செய்த வடகம், பனங்கிழங்கு, மரவள்ளி உணவுகள், காளான் உணவுகள், மரக்கறி கூழ் என்று உணவு வகைகள் நாவிற்கு புதிய சுவைகளை அறிமுகம் செய்தது.

காலநிலையில் கூட காலம் எத்தனை மாறுபாடுகளை தந்து இருக்கிறது

காலையிலிருந்து மாலையில் வரை குளிர் எங்களை தொட்டுக் கொண்டே இருக்கும் மலையகத்தின் குளிர்மையில் இருந்து விடுபட்ட நாங்கள். அதிக வெயில் காலங்களில் வாழ பழகி கொள்ள ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் சற்று கடினமாக இருந்தது. ஆனால், இப்போது வெயில் பழகி போனது. பங்குனி மாதத்தில் மட்டுமல்ல வருடம் முழுவதும் தெருவோர வேப்பமரத்தின் குளிர்காற்று எப்போதுமே எங்களை வரவேற்கும். கிணற்றடி தண்ணீர் குளிர்பானமாய் தாகம் தீர்க்கும். மலையகத் தாயிடம் பிறந்து,

யாழ் தாயின் வளர்ப்பு பிள்ளைகளாய் நாங்கள் மாறிப்போனது என்னவோ உண்மைதான். பேசும் மொழியில் கூட வேறுபாடுகள் மிக அதிகமாக உணர்ந்தோம். ஆனால்,

எத்தனை அழகிய உச்சரிப்பு. பிறந்தது முதல் சாதாரணமாக பேசும் போது கூட தூய தமிழ் பேச்சு வழக்காய் இருப்பதாலோ என்னவோ? அவர்களுக்கு தமிழ் சரளமான உச்சரிப்போடு வெளிவருவதுண்டு.

ஓங்கி வளர்ந்த பனைமரம் நிழல் தருவதில்லை. என்றாலும், அதிலிருந்து முழு பயனையும் எத்தனை அழகாக பெற்றுக் கொள்கிறார்கள். பனை இனிப்பு பொருட்கள், அலங்கார பொருட்கள், வீட்டு பாவனை பொருட்கள் என்றும் மறுபுறம் வேலிகள் அடைக்கவும் வீடுகள் கட்டவும் பெரும்பாலும் பனை மரங்களே பயன்படுகின்றன.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்ற மலையக தேசம். யாழ்ப்பாணம் என்றால் மணலும் மணல் சார்ந்த பாலை நிலம் ஒரு புறம் வயலும் வயல் சார்ந்த முல்லை நிலம் ஒரு புறம் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலம் ஒரு புறம். இப்படி புதிய அனுபவங்களை அழகிய தருணங்களை அனுபவித்த நினைவுகளை தந்தது யாழ்ப்பாணம்.

மலையகம் என்ற மாற்றான் தாய் பிள்ளைகள் என்று எண்ணாமல் மடி மீது எம்மை சுமக்கும் யாழ் மண்ணின் செல்ல பிள்ளைகள் நாங்கள். உண்மையில் யாழ்ப்பாணம் என்பது எல்லா வளங்களும் நிறைந்த இலங்கையின் சின்ன சிங்கப்பூர் தான்.

# மனித உணவு கேட்ட ஆழிப் பேரலை





சங்கீர்த்தனா அருளானந்தம்
( யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)





**"ஆலா பற பற கோழி குஞ்சு தாரன்" என நானும் எனது அண்ணனும் அன்றொரு நாள் விளையாடிக் கொண்டிருந்தோம்.**

அன்று ஞாயிற்றுக்கிழமை. பருவம் அறியாத வயதது. வழமைக்கு மாறாக வானம் மந்தமாக வித்தியாசமாக காணப்பட்டது. நானும் எனது அண்ணனும் வழமை போன்று விளையாடிக் கொண்டிருக்க அம்மாவும் வைந்து கொண்டிருந்தார்.

மழை வரப்போகுது என்றால் எங்களுக்கு ஒரு ஆனந்தம் தானே. வானத்தை அந்நார்ந்து பார்த்துக் கொண்டு "ஆலா பற பற கோழி குஞ்சு தாரன்" என்று நானும் எனது அண்ணனும் போட்டிக்கு சத்தமாக கத்திக் கொண்டே இருந்தோம்.

"காலையில் எழும்பி பல்லு கூட விளக்காமல் கத்தாதீர்கள்" என வைந்த அம்மா, குசினிக்குள் அழைத்தார் அந்த சிவப்பு சாயத்தை பருகுவதற்காக.

நானும் என் அண்ணனும் அம்மாவின் முதுகில் சாய்ந்தபடி தேனீருக்காக நின்று கொண்டிருந்தோம். திடீரென வீதியில் கத்திக்கொண்டு ஒருவர் ஓடி வந்தார்.

எங்கள் அம்மாவோ ஆற்றிய தேநீரை இடையில் வைத்து விட்டு வெளியில் போய் பார்த்தார். எங்களது மாமா சத்தமாக கத்தி வந்தார். "கடலலை ஊருக்குள் வருகிறதாம், ஓடுங்கள் ஓடுங்கள்" என அவரும் ஓடிக்கொண்டிருந்தார்.

அம்மா பதறி கொண்டு எங்களது ஜாதக பையை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு ஊரிலுள்ள ஒரு மலைக்கோவில் நோக்கி ஓடினார். அம்மாவின் அந்தப் பதட்டமும் பயமும் இன்னமும் என் கண்களில் அப்படியே இருக்கிறது.

பின்பு தான் கூறினார்கள் அதன் பெயர் "சுனாமி"யாம் என்று.

ஆழிப்பேரலையின் கோர தாண்டவம் நிகழ்ந்து 18 வருடங்கள் நிறைவடைந்த நிலையில், இன்னுமுமே அதன் வடு இருந்து கொண்டு தான் இருக்கிறது. 2004.12. 26 ஆம் திகதி 9.1 ரிக்டர் அளவில் இந்திய பெருங்கடலில் சுமத்ரா தீவில் ஏற்பட்ட நில நடுக்கம் உலக வரலாற்றில் இரண்டாவது மிகப்பெரிய நிலநடுக்கமாக பதிவாகியது.

ஆழ்கடலில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் பேரதிர்வு காரணமாக சுனாமி எனும் ஆழிப்பேரலை பல நாடுகளை காவு கொண்டது. அதில் இலங்கை தீவும் காவு கொள்ளப்பட்டது. 1883 ஆம் ஆண்டு முதல் சுனாமி என வகைப்படுத்தப்பட்ட மொத்தம் நான்கு அலைகள் இலங்கையில் ஏற்பட்டு 35,333 பேரைக் கொன்றுள்ளன.

இதுவரை இலங்கையில் பதிவாகியுள்ள வலுவான அலையானது 12.50 மீட்டர் உயரத்தை எட்டியுள்ளது. 2004. 12. 26 அன்று இந்த சுனாமியில் மட்டும் மொத்தம் 35,322 பேர் காவு கொள்ளப்பட்டுள்ளனர்.

மொத்தமாக 14 நாடுகளை தாக்கிய ஆழிப்பேரலை பல நாடுகளின் பில்லியன் டொலர் மதிப்புள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தது. இலங்கையில் உயிர்கள், உடமைகள் என பலவும் அளிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 3000 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைதீவு, திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை மாத்தறை மற்றும் காலி ஆகிய கரையோர மாவட்டங்களை இந்த கடலலை காவு கொண்டது.

பாரிய உயிர்ச்சேதம் சமூகங்களை அழித்ததால் பாதிக்கப்பட்ட அந்த சமூகங்களுக்கு இதன் தாக்கம் பேரழிவை ஏற்படுத்தியது. மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பெருமளவிலான இடம் பெயர்ந்தோர் பள்ளிகள் மற்றும் அரசாங்கக் கட்டிடங்களில் தஞ்சம் புகுந்து உயிர் வாழும் சேவைகள் மற்றும் வசதிகள் குறைவாகவோ அல்லது வசதிகள் இல்லாத உயர்வான பகுதிகளில் திறந்த வெளியில் தங்க வைக்கப்பட்டனர்.

உடனடி நிவாரணத்திற்கு மக்கள் அவதிப்பட்ட நிலையில் UNHCR 3 லட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியது. UNICEF, UNFPA போன்றனவும் சுகாதார உதவி மற்றும் மருத்துவ கருவிகள் போன்றவற்றை வழங்கி உதவிக்கரம் நீட்டியது.

கடல் தாயின் சீற்றம் அடங்கும் வகையில் உயிர்பலிகள் நிகழ்ந்த இந்தத்தினம் (2004.12.26) எல்லோர் மனதிலும் இன்றும் கூட ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

அந்தக் கறுப்பு நாளில் கடல் தாயின் பசிக்கு இரையான எம் சொந்தங்களை நினைவு கூறும் வகையில் இந்தப் பதிவினை செய்கிறேன். இயற்கை சீற்றம் கொண்டால் மனித இயந்திரங்கள் வலு இழந்து விடும். இயற்கையை சீற்றம் கொள்ள வைக்காமல் பாதுகாப்பது எம் பொறுப்பில் ஒன்று.



பூநகரி– மண்டைக்கல்லாறு பகுதியில்

# உவநீர் தடுப்பணை

பாஸ்கரன்



கிளிநொச்சி- பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட மண்டைக் கல்லாறுக்கு ஊடாக பயிர் செய்கை நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகுதலை தடுக்கும் உவநீர் தடுப்பணையை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சுமார் 495 மில்லியன் ரூபாய் செலவில் கதவுகளுடன் கூடிய உவநீர் தடுப்பணையை அமைக்கும் பணிகள் உலக வங்கியின் நிதி உதவியுடன் அடுத்தஆண்டில்முன்னெடுக்கப்படவுள்ளது.

உவநீர் தடுப்பணை இதுவரை அமைக்கப்படாமையினால் கடல் பெருக்கு காலங்களில் கடல் நீரானது, மண்டைக்கல்லாற்றினூடாக உட்புகுந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், குஞ்சு குளம், மண்ணியாகுளம் உள்ளிட்ட பகுதிகள் உவர் நிலங்களாக மாறியுள்ளதுடன் குறித்த கிராமங்களில் இருந்து மக்களும் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர்.

தற்போது ஆணை விழுந்தான், அக்கராயன் குளம், மணியங்குளம் ஆகிய பகுதிகளும் உவநீர் பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருவதுடன் ,மண்டைக்கல்லாறு பகுதியை அண்மித்த பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பெரும்பகுதியும் இவ்வாறு உவர் ஆக்கிரமிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளன.

இவ்வாறு மண்டைக்கல்லாற்றின் ஊடாகப் பெருக்கெடுக்கும் உவர்நீர் காரணமாக குறித்த பிரதேசத்தில் சுமார் 6140 ஏக்கர் வரையான நிலங்கள் உவர் நிலங்களாக மாறி மாறியுள்ளதுடன் வெற்றுத்தரவைகளாகவே காணப்படுகினன்றன.

இவ்வாறான நிலையில் ஏ 32 வீதியில் மண்டைக்கல்லாறு பாலத்துக்கு அண்மித்த பகுதியில் மேற்படி பிரதேசங்களுக்கு கடல் நீர் உட்பகுவதை தடுக்கும் வகையில், உலக வங்கியின் நிதி உதவியுடன் கதவுகளுடன் கூடிய உவர் நீர் தடுப்பணை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேலை திட்டத்திற்கு என 495 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதுவாக வன வளத் திணைக்களத்திடமிருந்து குறிப்பிட்ட சில பகுதிகளை விடுவிக்க வேண்டி உள்ளதால் இதற்கான வேலைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என்றும் கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை திட்டம் நிறைவுறுத்தப்பட்டதன் பின்னர் மேற்படி உவர்நிலங்களாக காணப்படுகின்ற சுமார் 6,140 ஏக்கர் நிலங்களில் பெரும் பகுதி பயிர் செய்கை நிலங்களாக எதிர்காலத்தில் மாறக் கூடியதாக அமையும் அத்துதுடன் குறித்த நிலங்களில் ஒருபகுதியை கால்நடைகளுக்கான மேச்சல் தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும் என்றும் கிளநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது

இனப்பிரச்சினை தீர்க்கப்படும் போது

# எங்கள் பிரச்சினையும் தீர்க்கப்படவேண்டும்

## முஸ்லிம் நிறுவனங்கள் கூட்டமைப்பு தீர்மானம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்



இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் போது, முஸ்லிம்களின் பிரச்சினையும் தீர்க்கப்படல் வேண்டும் என கிழக்கு மாகாண பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

“சமகால அரசியல் நகர்வுகளில் முஸ்லிம்கள்” எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் கிழக்கு மாகாண பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் கூட்டமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும் சனிக்கிழமை (24) காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன அஷ்ஷஹீட் அகமட் லெவ்வை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சம்மேளனங்களினை உள்ளடக்கிய கிழக்கு மாகாண பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் கூட்டமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிழக்கு மாகாண பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் கூட்டமைப்பின் தலைவரும் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவருமான ரஊப் மஜீத் இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படல் வேண்டும்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுப்பதற்காக இந்த மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சம்மேளனங்களினை உள்ளடக்கிய கிழக்கு மாகாண பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளோம்.

முஸ்லிம்களாகிய எங்களிடமும் கலந்தாசித்து இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வை உருவாக்க வேண்டும் என்பது கிழக்கு மாகாண முஸ்லிம்களாகிய எங்களுடை கருத்தாகும். கிழக்கு மாகாண பள்ளிவாயல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் கூட்டமைப்பில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி இதில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து 20 பேர் வீதம் 60 பேரை உள்ளடக்கி என்னை தலைவராக கொண்டு இந்த கூட்டமைப்பை உருவாக்கியுள்ளார்கள்

இனப்பிரச்சினைக்கான தீர்வில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பில் ஏற்கனவே எங்களது புத்தி ஜீவிகளால் முன் மொழிவுகள் வரையப்பட்டு முன் வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரம் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் புத்தி ஜீவிகள் ஒன்று கூடி நிரந்தரமான தீர்வொன்றுக்கான ஆலோசனையை முன் வைக்கவுள்ளோம்.

இந்த முன் மொழிவினை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சேர்ப்போம். இது கிழக்கு மாகாண முஸ்லிம்களின் ஒட்டு மொத்த அரசியல் அபிலாசையாகும்.

முஸ்லிம் அரசியல் தலைமைகளை நாங்கள் புறக்கணித்துச் செல்லவில்லை. எங்களுடைய இந்த வேலைத்திட்டத்தோடு முஸ்லிம் அரசியல் தலைமைகளும் இணைந்து கொள்ளலாம் என்றார்.





# விசேட மலையாள பூஜை...

வவுனியா–திருநாவற்குளத்தில் அமைந்துள்ள சிறீ சபரீஷன ஐயப்ப தேவஸ்தானத்தில் விசேட மலையாள பூஜை, சர்வதேச இந்துமத குருபீடதிபதி, சபரிமலை குரு முதல்வர், ஆன்மீக அருள் ஜோதி, மஹாராஜா ராஜகுரு சிறீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவச்சாரியார் தலைமையில் சனிக்கிழமை(24) இரவு நடைபெற்றது.( க. அகரன் )

# தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டன...



அகில இலங்கை முஸ்லீம் வாலிபர் சங்கத்தினால் (YMMA) நாடளாவிய ரீதியில் இன,மத பேதங்களுக்கு அப்பால் “ஐந்து இலட்சம்” தென்னங்கன்றுகளை நட்டு வைக்கும் திட்டத்தின்கீழ், திருகோணமலை –தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 1,000 பயனாளிகளுக்கு தென்னம் பிள்ளைகள் ஞாயிற்றுக்கிழமை (25) வழங்கி வைக்கப்பட்டன. ( தீஷான் அஹமட்)



விக்னேஸ்வரனின் எம்.பியின் வீட்டில்

# ஒன்று கூடிய தமிழ்க்கட்சித் தலைவர்கள்

நிதர்ஷன்

தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சமகால நிலைமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

நல்லூரிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் கூடியதமிழ் கட்சிகளின் தலைவர்கள், இரண்டு மணிநேரம் வரை சந்திப்பில் ஈடுபட்டனர்.

குறித்த சந்திப்பில், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி. விக்னேஸ்வரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி. ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொண்டனர்.

இதன்போது ஜனாதிபதியுடனான சந்திப்பு, தேர்தல், ஜெனீவா போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகதமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# வவுனியாவில் 6 கைதிகள் விடுதலை

க. அகரன்



வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 கைதிகள் நத்தார் தினதன்று (25) விடுதலை செய்யப்பட்டனர்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொது மன்னிப்பின் கீழ், நாடளாவிய ரீதியில் 309 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் அறுவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றச் செயல்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தாமை போன்ற சிறு குற்றங்களுக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த கைதிகளுக்கு ஆலோசனை வழங்கி, கைலாகு கொடுத்து அவர்களை விடுவித்து வழி அனுப்பி வைத்தனர்.

# விபத்தால் சிறுவனின் கை துண்டிக்கப்பட்டது

எஸ் தில்லைநாதன்



பளையில் கடந்த புதன்கிழமை(21) இடம்பெற்ற, பஸ் விபத்தில் படுகாயமடைந்த சிறுவனின் கை துண்டிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து -முல்லைத்தீவு ஊடக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இலங்கை போக்குரவத்து சபைக்கு சொந்தமான பஸ், வேகக் கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி - பளைப் பகுதியில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன்,17இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுக்கு இலக்காகினர்.

இந்நிலையில், விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த சிறுவன் ஒருவனின் கை துண்டிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிண்ணியாவில் படைபுளுவின் தாக்கத்தால்

# சோள விளைச்சல் குறைவடைந்தது

ஹஸ்பர்

படைப்புளுவின் தாக்கம் காரணமாக சோளச் செய்கையாளர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய,கிண்ணியா பிரதேசத்தில் கற்குழி, வட்டமடு, பனிச்சங்குளம், குரங்குபாஞ்சான் உட்பட பல பகுதிகளிலும் தற்போது சோளக் கதிர் அறுவடை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஒரு வகை படைப் புளு இனம் தாக்கம் அதிகரிப்பால் சோள விளைச்சல் குறைவடைந்துள்ளதென தெரிவிக்கின்றனர்.

பல இலட்சம் ரூபாய் செலவு செய்து ,சோள செய்கை மேற்கொண்டிருந்த போதும் உரிய விளைச்சல் கிடைக்கவில்லை இதற்கு காரணம் பசளை தட்டுப்பாடு , படை புளுவின் தாக்கம் என்றும் தெரிவிக்கின்றனர்.



நிலாவெளியில்

# போதைவஸ்து விழிப்புணர்வுத் திரைப்படம்



அ . அச்சுதன்

பிறிமன் இயக்கத்தில் உருவான “ அனல் “ 95 நிமிட முழுநீள திரைப்படம் 23ஆம் திகதி மாலை திருகோணமலை- நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந்த திரைப்படம் போதைக்கு அடிமையாக்கும் நாசகார சக்திகளிடமிருந்து மாணவர்களை பாதுகாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டிருப்பது முக்கிய விடயமாகும்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தமிழரசுக்கட்சியின் தலைவர் ச . குகதாசன், திரைப்பட இயக்குனர் பிறிமன், ஊடகவியலாளர்கள், அதிபர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பாலமுனை அஷ்ரப் வித்தியாலயத்தில்

# ஊடக செயலமர்வு

எம்.எஸ்.எம்.நூர்தீன்



காத்தான்குடி மீடியா போரத்தின் ஏற்பாட்டில் ‘ஊடகமும் மாணவர்களும்’ எனும் தலைப்பில் ஊடக செயலமர்வு, பாலமுனை அஷ்ரப் வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் சனிக்கிழிமை (24) நடைபெற்றது.

காத்தான்குடி மீடியா போரத்தின் ஏற்பாட்டில் அவ்வமைப்பின் ஆயுட்கால தலைவரும் ஊடகவியலாளருமான மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபாவின் வழிகாட்டலில் இச் செயலமர்வு நடைபெற்றது.

இதில் பாலமுனை அலிகார் வித்தியாலயம், பாலமுனை,அஷ்ரப் வித்தியாலயம், காங்கேயனோடை அல் அக்ஷா வித்தியாலய ஆகிய பாடசாலைகளில் தரம் 11 மற்றும் 12 இல் கல்விப் பயிலும் 50 மாணவர்கள் கலந்து கொண்டனர். செயலமர்வின் இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





# மலையகத்தில் கடும் மழை

■ ரஞ்சித் ராஜபக்ஷ, சுந்ரு

மலையகத்தின் பல இடங்களிலும் ஞாயிற்றுக்கிழமை (25) அதிகாலை தொடக்கம் கடும் மழையுடனான வானிலை நிலவியது.

இதனால் மலையகம் முழுவதும் இருளான சூழல் நிலவுவதுடன், ஹட்டன்-கொழும்பு பிரதான வீதி, ஹட்டன்- நுவரெலியா பிரதான வீதி மற்றும் ஏனைய வீதிகள் மழையினால் வழுக்கும் தன்மையுடன் காணப்படுகின்றன.

மேலும் நுவரெலியா - ஹற்றன் ,நுவரெலியா - கண்டி , நுவரெலியா -வெளிமடை போன்ற பிரதான வீதிகளிலும் ரதல்ல, நானுஓயா , டெஸ்போட் ,கந்தப்பளை ஆகிய பகுதிகள் எங்கும் கடுமையான பனி மூட்டம் காணப்படுவதால் சாரதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன், நுவரெலியாவிலிருந்து-தலவாக்கலை செல்லும் பிரதான வீதியின் நானுஓயா சந்திக்கு அருகில் வீதி தாழிறங்கியுள்ளது. மேலும் பல இடங்களிலும் சிறிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால் கனரக வாகனங்களை அவ்வீதியினூடாக செலுத்த வேண்டாம் எனவும் நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

விடிந்தும் இரவு வேளையைப் போல இருளாகவே காட்சியளித்து. இதனால், நத்தார் பண்டிகையும் களைக்கட்டவில்லை. அத்துடன், இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருந்தது.

# இரண்டு நாட்களில் 25 பேர் சிக்கினர்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

பல்வேறு வகையான போதைப் பொருள்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரைச் சென்ற 25 பேர் இரண்டு நாட்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி விஜித அல்விஸின் ஆலோசனைக்கமைய, ஏனைய பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவின் ஸ்டுவட் மோப்ப நாயின் உதவியுடன் இந்த மாதம் 23ஆம்,24ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் காலி, சிலாபம், மொனராகலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர்கள் அனைவரும் 20-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பெண்களின் தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிப்பது எமது இலக்கு



■ எஸ்.கணேசன்

2023ஆம் ஆண்டு எமக்கு மிக முக்கியமான ஆண்டாகும் எனத் தெரிவித்த, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடு அமைப்பு அமைச்சின் பிரஜா சக்தி பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி, 2023ஆம் ஆண்டு பெண்களின் பாதுகாப்பையும் அவர்களின் தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிப்பதும் எமது இலக்காகும் என்றார்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினமும் இந்திய வம்சாவளி மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் வரலாற்றுத் தடம் பதிக்கும் ஆண்டாகும். இந்நிலையில் பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டு பல வேலை திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தெல்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட மிகவும் பின் தங்கிய பெருந்தோட்ட மற்றும் கிராமப் பகுதிகளில் வாழும் பெண்களுக்கு சுகாதாரப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சூழ்நிலை காரணமாக பெண்கள் தங்களது குடும்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தங்களது சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகளை பிள்ளைகளுடைய கல்வியை மேற்கொள்ளவும் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

எனவே, 2023 ஆம் ஆண்டு தொழில் முனைவோருக்கான ஆண்டாக மாற்ற பல வேலை திட்டங்களை நாம் முன்னெடுக்க உள்ளோம்.

எமது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இந்தியா வம்சாவளி மக்கள் பொருளாதார ரீதியில் பலமடைய பல வேலை திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து செல்கின்றோம். பெண் தலைமைத்துவத்தை எதிர்வரும் தேர்தல்களில் பெண் பிரதிநிதிகளை அதிகரிப்பதற்கான விசேட திட்டங்களையும் நாம் உள்வாங்கியுள்ளோம் என்றார்.

# 15 வயது சிறுமியைக் காணவில்லை

■ ராமு தனராஜ்

லுணுகலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சூரியகொட பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியை காணவில்லை என லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

லுணுகலை பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 10ல் கல்வி பயிலும் குறித்த சிறுமி, சனிக்கிழமை(24) காலை பிரத்தியேக வகுப்பு ஒன்றுக்கு சென்று வீடு திரும்பவில்லை என சிறுமியின் தாயாரால் லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரும் சிறுமியின் உறவினர்களும் இணைந்து சிறுமியைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.









## மலையகத்தில் நத்தார்...

மலையகத்தில் நத்தார் பண்டிகையை மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது. தேவாலயங்களில் விசேட ஆராதனைகள், கலை விழாக்கள் என்பன நடைபெற்றன. ஹட்டன் திருச்சிலுவை தேவலாயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று அருட் தந்தை நியூமன் பீரிஸினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (எஸ்.கணேசன்)

## ஸ்னூக்கர் போட்டியில்

# ஊடகவியலாளர் சுப்பிரமணியம் முதலிடம்



■ எஸ். கே. குமார்

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தால் நத்தார் தின பண்டிகையை முன்னிட்டு, கடந்த இரண்டு வாரங்களாக நடத்தப்பட்ட “ ஸ்னூக்கர்” , “ பிலியட் “, “ மேசை பந்து “ போட்டிகளின் இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு வைபவமும் நுவரெலியா விளையாட்டுக் கழக மண்டபத்தில் சனிக்கிழமை (24) நடைபெற்றது.

36 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய “ஸ்னூக்கர்” போட்டியின் இறுதிப் போட்டியில் 36 - 29 என்ற புள்ளி அடிப்படையில் முதலாம் இடத்தை ஊடகவியலாளரான பெரியசாமி சுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார். இரண்டாம் இடத்தை எம். குணரட்ன பெற்றுகொண்டார்.

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அருணசாந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக நுவரெலியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகம சூரிய கலந்துக்கொண்டார்.

# விண்ணப்பங்களை கோரியுள்ள இ.தொ.கா

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் (இ.தொ.கா) சார்பில் போட்டியிட விருப்பமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய, தமது விண்ணப்பங்களை சுயவிபரங்கள் உள்ளடக்கி, போட்டியிட விரும்பும் உள்ளூராட்சி சபையின் பெயர்,உள்ளூராட்சி சபையின் எல்லைக்கு உட்பட்ட போட்டியிட விரும்பும் வட்டாரத்தையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்கள், எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி முதல் ஜனவரி 10ம் திகதிக்கு இடையில் இ.தொ.கா தேர்தல் பிரிவு கணக்காளர், இலக்கம் 72, சௌமியபவான், ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் பதிவு செய்யுமாறு இ.தொ.கா அறிவித்துள்ளது.

# யாத்திரிகர்களின் வருகை அதிகரிப்பு

■ செதி.பெருமாள்

இந்த மாதம் 22ஆஅம் திகதி, நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளும் அரசாங்கம் விடுமுறை வழங்கியதால் நாட்டில் பல பகுதிகளில் இருந்தும் சிவனொளிபாதமலைக்கு வருகைத் தரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கூடுதலாக ரயில்கள் ஊடாக பயணிக்கும் யாத்திரிகர்கள், ஹட்டன் நகருக்கு வந்து, அங்கிருந்து இ.போ.ச பஸ்கள் மூலம் நல்லத்தண்ணிருக்கு வருகைத் தருகின்றனர்.

அதேபோல் சிரிய கார், வான், ஓட்டோ, மோட்டார் சைக்கிள்கள் மூலமும் அதிகளவான



யாத்திரிகர்கள் வந்துச் செல்லும் நிலையில், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தனிப்பட்ட வாகனங்களில் வருபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பால் தனிப்பட்ட வாகனப் பயன்பாடு குறைவடைந்துள்ளதுடன், பொது போக்குவரத்தையே யாத்திரிகர்கள் அதிகம் பயன்படுத்துவதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற

# ஆணைக்குழு அவசியம்

■ எஸ்.கணேசன்

மலையத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இது விடயம் சம்பந்தமாக ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டு அக்குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் தீர்வு அவசியம் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் (இ.தொ.கா) பிரதித் தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கணகராஜ் தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நுவரெலியாவுக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தைகூட்டி முக்கிய பல விடயங்களை முன்வைத்திருந்தார்.

இதில் குறிப்பாக தோட்டக் கம்பனிகள் தமது கையிருப்பில் வைத்துள்ள தரிசு நிலங்கள், பயிர்செய்கைக்காக இளைஞர், யுவதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் எனவும், கம்பனிகளுடனான குத்தகை உடன்படிக்கை இரத்து செய்யப்படும் எனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இக்கூற்றை நாம் வரவேற்கின்றோம்.

அதேபோல மலையகம் சம்பந்தமாக ஆணைக்குழுவொன்றை அமைத்து, அந்த ஆணைக்குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் மலையக தமிழர்களின் அரசியல்சார்




பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

அப்போதுதான் தேசிய நீரோட்டத்தில் எமது மக்களும் இணையக்கூடும். தமது பதவி காலம் முடிவடைவதற்குள் ஜனாதிபதி இதனை செய்ய வேண்டும். செய்வார் என நம்புகின்றோம் என்றார்.

# சுற்றியிருப்பவர்கள் தொடர்பில் எந்நேரமும் விழிப்பாய் இருங்கள்

வீட்டுக்குள் இருக்கமுடியாத நிலைமையும், வீட்டிலிருந்து வெளியே செல்லமுடியாத சூழ்நிலையும் நாட்டுக்குள் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பேரச்சத்துடன் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. தங்களுக்கு அருகில் இருப்பவர்களை எந்நேரமும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

பண்டிகை காலம் என்பதால் மிகவும் அவதானத்துக்கு வெளியே செல்லவேண்டிய நிலைமைக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது. அந்தளவுக்கு கொள்ளைகள், முடிச்சுமாற்றிகள், மிகவும் நாசுக்காக ஏமாற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எதனையும் சந்தேகத்துடன் பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நகைகளை அணிந்து செல்வோர் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டியுள்ளது. சரி, வீட்டில் வைத்துவிட்டு சென்றாலும் கொள்ளையர்கள் தங்களுடைய கைவரிசை காண்பித்துவிடுகின்றனர். கூரைகளை பிய்த்துக்கொண்டு இன்றேல் கதவு, யன்னல்களை உடைந்துகொண்டு உள்நுழைபவர்கள், பெறுமதியான பொருட்கள் உள்ளிட்ட நகைகள், பணத்தை அப்படியே அள்ளிச் சென்றுவிடுகின்றனர்.

இன்னும் சில இடங்களில், தோடுடன் காதையும் அறுத்துச் செல்லும் சம்பவங்களும் வீதியில் தனியாக செல்லும் குறிப்பாக பெண்களிடம், வழி அல்லது விலாசத்தை கேட்பதைப்போல அருகில் சென்று, அப்பெண் அணிந்திருக்கும் நகைகளை அபகரித்துச் சென்றுவிடுகின்றனர். அந்தளவுக்கு கொள்ளைகள் மலிந்துவிட்டன.

எனினும், தங்களுடைய வர்த்தக நிலையங்கள் இன்றேல் பொது ப்போக்குவரத்து ஏன்? வீதிகளில் கிடந்த பெறுமதியான பொதிகளை எடுத்து உரியவர்களிடம் ஒப்படைக்கும் நல்லுள்ளங்கள் படைத்தவர்களும் இல்லாமல் இல்லை.

இன்னுமின்னும் எவ்வாறான சம்பவங்கள் எல்லாம் இடம்பெற போகின்றனவோ என்பதை ஊகிக்கமுடியாதுள்ளது. இடத்துக்கு ஏற்றவகையில் முன்கூட்டியே திட்டமிடும் திருடர்கள் அல்லது கும்பல்கள், மிகவும் நாசுக்கான முறையில் தங்களுடைய கைவரிசையை காண்பித்துவிட்டு தப்பிச்சென்று தலைமறைவாகிவிடுகின்றனர்.

நாட்டின் நிலைமை அந்தளவுக்குச் சென்றுவிட்டமையால் ஒவ்வொருவரும் மிகக்கவனமாக இருக்கவேண்டும். மின்வெட்டால் பிரதான நகர்களில் வீடுகளுக்குள் இருக்கமுடியாத நிலைமையும், கொள்ளையர்கள், கள்வர்கள், முடிச்சிமாற்றிகளால் வீடுகளுக்கு வெளியே செல்லமுடியாத நிலைமையும் எற்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் போது ஒவ்வொருவரும் விழிபாகவே இருக்கவேண்டும். இருலடைந்த குறுக்கு வீதிகளிலும், வீதி மின்விளக்குகள் அணைக்கப்பட்டிருக்கும் பிரதான வீதிகளிலும் தன்னந்தனியாக செல்வதை தவிர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமையொன்றே ஏற்பட்டுள்ளது.

பசி,பட்டினி, போஷாக்கான உணவு இன்மை, பணமிருந்தும் தேவையான பொருட்கள் இன்மை, மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இன்னோரன்ன பிரச்சினைகளில் எத்தனைப்பேர் மரணித்துள்ளனர் என்பதை கணக்கிடமுடியாது. சில மரணங்களுக்கு காரணங்களை கண்டுப்பிடிக்கவே முடியாது. விரக்தியிலும் பலர் மரணித்துள்ளனர்.

இதற்கிடையில், கொன்றுவிட்டு பொருட்களையும் பணங்களையும் கொள்ளையிட்டு தலைமறைவாகிவிடுதல் அரங்கேறுகின்றன. ஆகையால், வீட்டுத்தேவைக்காக பெருந்தொகை பணத்தை, வங்கிகளிலிருந்து மீளப்பெறுவோர், தன்னியக்க இயந்திரங்களை பயன்படுத்தாமல் இருப்பதுடன், தங்களைச் சுற்றியிருப்பவர்கள் தொடர்பில் விழிப்பாக இருப்பதும் அவசியமாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

ஆரம்பத்தில், அலுவலகத்தில் புதிதா கடமைக்கு வந்த அலுவலர்கள், தங்கள் வேலை மிகவும் கஷ்டமானது என எண்ணிக் கொள்வார்கள்.

ஆனால், காலங்கள் செல்லச் செல்ல, கடமைகளில் திறமையானவர்களாக மாறிவிடுகின்றார்கள்.

ஆனால், ஒருசிலர் தங்கள் கருமங்களில் ஆர்வம் இன்மையால், தொழிலில் முன்னேற்றம் அடையாமல், இருந்துவிடுகின்றாரகள்.

இவர்களுக்குப் பின்னர், வேலைக்குச் சேர்ந்த புதிய அலுவர்கள், தொடர்ந்து மிக ஆர்வத்துடன் கடமைகளைச் செய்தமையால், தமக்கு முன்னர் நியமனம் பெற்றவர்களைவிட, உயர்பதவிகளைப் பெற்றுவிடுகின்றார்கள்.

எல்லோரும் திறமைசாலிகளாக உயர முடியும். தொழடர்ச்சியான முயற்சிகள் அவசியமானவை.

செய்யும் தொழிலை நேசித்தால், எந்தச் சுமையான கடமைகளும் சுவாரஸ்யமாக மாறிவிடும். களிப்புடன் கருமம் ஆற்றவேண்டும்.

சொந்தப் பிரச்சினைகளை அலுவலகத்துக்குச் சுமத்தலாகாது. தொழில் எமது உயிருக்கு மேலானது. சமூகத்துக்கும் உங்கள் குடும்பநலனுன்கும் எங்களால் ஆற்றும் நற்செயல்களே, முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும். முழுமையான இரசனையுடனும் ஈடுபாட்டுடனும் காரியங்களை ஆற்றுக!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# பங்களாதேஷின் சுதந்திர தினமும் இந்தியாவின் தியாக தினமும்

“நாம் ஒருவரை முற்றிலும் சார்ந்தோ அல்லது தனித்தோ இருக்க முடியாது ஆனால் இவ்வுலகில் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கிறோம்” இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் கூற்று இது.

“ஒரு மோசமான அண்டை நாடு ஒரு துரதிர்ஷ்டம்; அதுவே ஒரு நல்ல நாடாக அமையுமேயானால் அதைவிட ஆசீர்வாதம் வேறு இல்லை” என்று ஒரு கிரேக்க அறிஞர் சொல்லியிருக்கிறார்.

அண்டைய நாட்டின் உதவி ஒத்தாசை மூலம் இன்று சுதந்திர நாடாக எழுந்து நிற்கின்ற பங்களாதேஷ் என்ற நாட்டிற்கு மேலே சுட்டிக்காட்டிய கருத்துக்கள் சரியாக பொருந்திப் போகின்றன.

பங்களாதேஷ் என்ற நாடு அது எதிர்கொண்ட அடக்குமுறைகளிலிருந்து மீண்டு, உலக வரைபடத்தில் தனிநாடாக இடம்பெறுவதற்கு அதன் அண்டை நாடான இந்தியா கரம் கொடுத்தது. பங்களாதேஷ் என்ற நாடு உருவாகி ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன. 1971ம் ஆண்டு டிசெம்பர் மாதம் பங்களாதேஷ், பாகிஸ்தானோடு போராடி விடுதலை பெற்று சுதந்திர நாடாக மாறியது.

இந்தியாவை ஆண்ட பிரித்தானியர்கள் தங்களது ஆட்சி அதிகாரம் நிலைத்திருக்க, பல்வேறு பிரித்தாளும் சூழ்ச்சிகளை செய்து வந்தனர். அதில் ஒன்றுதான் வங்கப்பிரிவினை.

1905ம் ஆண்டு இந்தியாவின் வங்காள மாகாணம் மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் என இரண்டு மாகாணங்களாக பிரிக்கப்பட்டன. மேற்கு வங்காளத்தில் இந்துக்களும், கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக இருந்தனர்.

பிரித்தானியர்களின் இந்த மதரீதியிலான பிரித்தாளும் சூழ்ச்சிக்கு தேசியவாதிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதை எதிர்த்து காங்கிரஸ் தலைமையில் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக 1911ம் ஆண்டு, இரண்டு மாகாணங்களையும் ஒருங்கிணைந்த வங்காளமாக பிரித்தானிய அரசு மீண்டும் அறிவித்தது.

பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருந்த இந்தியா 1947ம் ஆண்டு இந்து, முஸ்லிம் என்ற இன அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, விடுதலை வழங்கப்பட்டது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதி பாகிஸ்தான் என்ற பெயரில் தனிநாடாக உருவானது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த “கிழக்கு வங்காளம்” என்ற பகுதியும் கிழக்கு பாகிஸ்தான் என்ற பெயரில் பாகிஸ்தானோடு இணைக்கப்பட்டது.

கிழக்கு பாகிஸ்தானில், பெங்காலி மொழியை தாய் மொழியாக கொண்ட முஸ்லிம்கள் அதிகம் வாழ்ந்து வந்தனர். கிழக்கு பாகிஸ்தான் என்ற பெயரில் பாகிஸ்தானோடு இது இணைக்கப்பட்ட போதும், பாகிஸ்தானுடனான எவ்வித நிலத்தொடர்பையும் இந்த கிழக்கு பாகிஸ்தான் கொண்டிருக்கவில்லை.

அது தவிர, பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தானுக்குமிடையிலான தூரம் சுமார் 1600 கிலோ மீட்டர்களாக இருந்தது. மேற்கு பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தானுக்கும் இடையிலான போக்குவரத்து இந்தியாவினூடாகவே நடைபெற்று வந்தது.

பாகிஸ்தான் அரசு, கிழக்கு பாகிஸ்தானின் மக்கள் மீது அதிக பாகுபாடு காட்டி வந்தது. மொழி வேறுபாடு காரணமாகவும், அடக்குமுறை காரணமாகவும், பொருளாதரப் புறக்கணிப்பு காரணமாகவும், கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பலத்த நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

பாகிஸ்தானின் ஆட்சியின் கீழ் இருந்த “கிழக்கு பாகிஸ்தான்” பிளவுபட்டு தனி நாடாக பிரிந்து செல்வதற்குரிய நியாயமான காரணிகளை பாகிஸ்தானின் அதிகார வர்க்கமே உருவாக்கியிருந்தது. கிழக்கு பாகிஸ்தான் மக்கள் மீதான பாகிஸ்தானின் எதேச்சதிகார அடக்குமுறைச் செயற்பாடுகளினால் இந்த எழுச்சிகள் ஏற்பட்டன.

கிழக்கு பாகிஸ்தான் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்து வந்த பாகிஸ்தானின் அதிகார வர்க்கம், பெங்காலி மொழியை தாய்மொழியாகக் கொண்ட அந்த மக்கள் மீது உருது மொழியை பலாத்காரமாக திணிக்கும் அவலமான நடவடிக்கையில் இறங்கியது.

கிழக்கு பாகிஸ்தான் மக்களின் தாய் மொழி பெங்காலி மொழியாக இருந்தது. என்றபோதிலும், பாகிஸ்தான் அரசு, உருது மொழியை அதன் நிர்வாக மொழியாக அறிவித்து கிழக்கு பாகிஸ்தான் மக்களின் மொழியுரிமையை இருட்டடிப்பு செய்தது.

அது மாத்திரமல்லாமல், அந்த மக்கள் மீது அரசியல் அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விட்டது. 1970ம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தானில் இடம் பெற்ற, தேர்தலில் ஷேக் முஜிபுர் றஹ்மானின் அவாமி லீக் அமோக வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அரசு அந்தத் தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

1970ம் ஆண்டு, போலா என்ற சூறாவளி கிழக்கு பாகிஸ்தானைத் தாக்கியதால் மூன்று லட்சம் மக்கள் உயிரிழந்தனர். இந்த அழிவுக்கு மேற்கு பாகிஸ்தான் அரசாங்கம் சரியாக நிதியுதவி வழங்காமல் பாரபட்சம் காட்டியதாக கிழக்கு பாகிஸ்தானியர்கள் குற்றம்சாட்டி போராட்டத்தில் குதித்தனர்.

பாகிஸ்தான் அரசின் அத்துமீறல்களுக்கும், பாரபட்சமான நிலைப்பாட்டிற்கும் எதிராக மக்கள் குரல் எழுப்பத் தொடங்கினர். கிழக்கு பாகிஸ்தான் மக்களின் போராட்டம் கூர்மையடைந்தது.

1971ம் ஆண்டு மார்ச் 26ம் திகதியன்று, கிழக்கு பாகிஸ்தான் அதிகாரப்பூர்வமாக பாகிஸ்தானிடமிருந்து பிரிய வேண்டுமென்ற கோரிக்கையை அறிவித்தது.

பாகிஸ்தானின் அடக்குமுறைகளுக்கு எதிராக கிழக்கு பாகிஸ்தானுக்கு உதவுமாறு, அப்போதைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தியிடம், அவாமி லீக் கட்சியின் தலைவர் ஷேக் முஜீபுர் ரகுமான் கோரிக்கை விடுத்தார். இதன் விளைவாக, பாகிஸ்தான் இராணுவம், இந்தியா மீது முதலாவதாக தாக்குதல் நடாத்த திட்டமிட்டது. பாகிஸ்தான் அரசு, இந்தியா மீது “செங்கிஸ் கான் நடவடிக்கை” என்ற பெயரில் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது. இந்தியாவின் 11 விமானப் படை தளங்கள் பாகிஸ்தானின் தாக்குதலுக்கு இலக்காகின.

இதற்கு பதிலடி கொடுக்கும் முகமாக இந்திய இராணுவம் கிழக்குப் பாகிஸ்தான் மீது படையெடுத்தது. வான்வழி, கடல் வழி, தரைவழி மூலம் இந்தியா கடுமையான தாக்குதல்களை ஆரம்பித்தது. இந்திய இராணுவமும் சோவியத் ஒன்றியமும் கிழக்கு பாகிஸ்தானின் விடுதலை இராணுவமான “முக்தி பாகினி”க்கு பூரண உதவிகளை வழங்கின.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் 1971ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி ஆரம்பமான போர், 13 நாட்கள் நீடித்தது. இதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்காவும், சீனாவும் பாகிஸ்தானுக்கு உதவிகளை வழங்கின.

இந்திய கடற்படை “ஒபரேஷன் ட்ரைடென்ட்” என்ற தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டு, டிசம்பர் 4ம் திகதி, கராச்சி துறைமுகம் அருகே நின்றிருந்த நான்கு பாகிஸ்தான் கப்பல்களை தாக்கியழித்து மூழ்கடித்தது.

போரின் காரணமாக 10 மில்லியன் மக்கள் அகதிகளாக இந்தியாவில் தஞ்சமடைந்தனர். போரில் இந்தியா வென்றது. 93 ஆயிரம் பேரை இந்திய இராணுவம் கைது செய்தது. 75 மில்லியன் மக்கள் பாகிஸ்தானின் அடக்குமுறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இது உலகளவில் ஆகக் குறைந்த நாட்களில் இடம்பெற்ற போர்களில் ஒன்றாகவும் பார்க்கப்படுகிறது.

டிசம்பர் 16ஆம் திகதி பீல்ட் மார்ஷல் சேம் மணிக்ஷா “இந்திய இராணுவம் தற்போது பங்களாதேஷ் நாட்டில் இருக்கிறது. உங்கள் விமானப்படை முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. நீங்கள் நாலா பக்கமும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் உடனடியாக சரணடையாவிட்டால் கொல்லப்படுவீர்கள்.” என்ற அறிவித்தலை பாகிஸ்தான் இராணுவத்திற்கு விடுத்தார்.

இந்த அறிவித்தலைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் இராணுவ கட்டளைத் தளபதி அமீர் அப்துல்லாஹ்கான் நியாசி உட்பட பாகிஸ்தானின் இராணுவமும், கிழக்கு பாகிஸ்தானில் இயங்கி வந்த மதவாத துணைப்படைகளும் இந்திய இராணுவ கட்டளைத் தளபதி ஜெக்ஜிட் சிங் அரோராவிடம் சரணடைந்தன.

இந்த யுத்தத்தில், சரணடைந்த பாகிஸ்தான் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 93 ஆயிரம் என கணக்கிடப்பட்டுள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இடம்பெற்ற மிகப்பெரிய “சரணடைதல் சம்பவம்” இது என சொல்லப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து போர் நிறைவுக்கு வந்தது. பங்களாதேஷ் நாடு சுதந்திரமான தனி நாடாக விடுதலையானது. இந்த போர் புவியரசியலிலும், பிராந்தியத்திலும், உலக வரைபடத்திலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது.

இறுதியில் பாகிஸ்தான் இராணுவம், இந்திய இராணுவத்திடம் தோற்று சரண் அடைந்ததால், 16 டிசம்பர் 1971 முதல் வங்காளதேசம் சுதந்திர நாடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஷேக் முஜீபுர் ரகுமான் தலைமையிலான புதிய பங்காளதேஷ் நாட்டை அங்கீகரித்த முதல் நாடு இந்தியா ஆகும்.

இப்போரில் பாகிஸ்தான் தரப்பில் பல மனித உரிமை மீறல்கள் நடந்ததாக அறிவிக்கப்பட்டது. பங்களாதேஷ் நாட்டின் அரச ஆவணங்கள் சுமார் மூன்று மில்லியன் பங்களா தேஷ் நாட்டு மக்கள் கொல்லப்பட்டதாக அறிவித்தது. ஆனால் பாகிஸ்தான் அரசு 26,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அறிவித்தது.

ஒரு போரின் மூலம் விடுதலை பெற்று எழுந்து நிற்கும் பங்களாதேஷ் நாடு, இன்று வரையிலும் இந்தியாவுடன், நட்புறவுடன் செயற்பட்டு வருகிறது. பாகிஸ்தானோ தொடர்ந்தும் இந்தியாவோடு “எதிரி” என்ற போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

டிசெம்பர் 16ம் திகதியை பங்களாதேஷ் நாடு சுதந்திர தினமாக கொண்டாடி வரும் அதே வேளை, இந்தியா அந்த தினத்தை போரில் வீர மரணம் அடைந்த இந்திய வீரர்களின் தியாக தினமாக கொண்டாடி வருகிறது.

## கடிதங்கள்

# பாலத்தை புனரமைக்கவும்

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலம் தாழிறங்கி உள்ளமையால், இந்த வீதியால் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பு வீதியின் முதன்மையான பாலமாக காணப்படும் வட்டுவாகல் பாலம், நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இது குறித்து, பல தடவைகள் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சுட்டிக்காட்டப்பட்டு, கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் எந்தவித நிரந்தரமான புனரமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பாலத்தில் அவ்வப்போது ஏற்படும் வெடிப்புகள், பாதிப்புகள் என்பன சீர்செய்யப்பட்டு வருகின்ற நிலையில், தற்போது பாலத்தின் ஒருபகுதியில், வீதி தாழிறங்கிக் காணப்படுகின்றது. இவ்வாறு பாலத்தின் ஒரு பகுதி தாழிறங்கிக் காணப்படுவது, பாலம் பாதுகாப்பற்றதாகக் காணப்படுகின்றது என்பதன் அறிகுறி என பாலத்தின் ஊடாகப் பயணிப்பவர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

எனவே, குறித்த வீதியால் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நீண்டகாலமாக, வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்படாத நிலையில், தொடர்சியாக கடற்தொழிலாளர்கள், பொதுமக்கள் என்போர், இந்தப் பாலத்தை புனரமைக்க கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

செ. கீதாஞ்சன்

புதுப்பிக்கத்தக்க வலுப் பயன்பாட்டை

# ஆரம்பிக்கும் ஹேமாஸ்




தொடர்ச்சியான நிலைபேறான வியாபார செயற்பாடுகளை முன்னெடுப்பதை உறுதி செய்யும் வகையில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியினால், புதுப்பிக்கத்தக்க வலுவை பயன்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குழுமத்தின் 2030 ஆம் ஆண்டை நோக்கிய சூழல் நிகழ்ச்சி நிரலின் அங்கமாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குழுமத்தின் பெருமளவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் பகுதிகளில் ஹேலீஸ் சோலரின் புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்திப் பிரிவான ஃபென்டன்ஸ் லிமிடெட்டினால், ஹேமாஸ் நிறுவனத்தின் தொழிற்சாலைப் பகுதிகளின் கூரைகளின் மீது சூரியப் படல்களைப் நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், தேசிய மின் வழங்கல் கட்டமைப்பிலிருந்தான மின்பாவனை 25 சதவீதத்தினால் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனூடாக, சூழலுக்கு ஏற்படும் தாக்கமும் குறைக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

வளிமண்டலத்தில் காபன் வெளியீட்டை குறைப்பதற்கு மேலதிகமாகவும், ஓசோன் படலம் பாதிப்படைவதை தணிப்பதில் பங்களிப்பு வழங்கும் வகையிலும், மாற்று வலு மூலங்களை பயன்படுத்துவதை ஆரம்பிக்கும் வகையில், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ், நிலக்கரி தட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்க தன்னைத் தயார்ப்படுத்திய வண்ணமுள்ளது.

ஏனைய கூட்டாண்மை நிறுவனங்களையும் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை பயன்படுத்த ஊக்குவிக்கும் முன்மாதிரியான நிறுவனமாக திகழ்வதற்கு ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் எதிர்பார்ப்பதுடன், அதனூடாக புதிய வியாபார வழமையாக இதனை மாற்றியமைத்து, இலங்கையில் மொத்த சூழல் தாக்கத்தை தணிப்பதற்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்.

தனது சூழல்சார் நிகழ்ச்சிநிரலினூடாக, சூழல் பாதுகாப்பு தொடர்பான பங்காண்மைகளினூடாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஹேமாஸ் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், பொறுப்பு வாய்ந்த வகையில் இயற்கை வளங்களை பயன்படுத்துவதை தணிப்பதற்கும், செயற்பாடுகளின் தாக்கத்தை குறைப்பதற்கும், பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைத்து, சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

CDB இடமிருந்து 2 பாடசாலைகளுக்கு

# ஸ்மார்ட் கணனி ஆய்வுகூடங்கள்




எதிர்பார்ப்புகளுக்கு வலுச்சேர்ப்பது எனும் தமது நோக்கத்தின் பிரகாரம் இயங்கும் சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB), தனது 25ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு முன்னெடுக்கும், ஸ்மார்ட் கணனி ஆய்வுகூடங்களை அன்பளிப்புச் செய்யும் செயற்திட்டத்தினூடாக 20 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் கணனி ஆய்வுகூடங்களை வழங்க முன்வந்துள்ளது. நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனத்தின் பிரதான சமூக நிலைபேறாண்மை திட்டமாக இது அமைந்திருப்பதுடன், இளைஞர்களுக்கு தொழில்நுட்பத்தை அணுகி, அவர்களின் டிஜிட்டல் அறிவை மேம்படுத்துவதனூடாக, மதிநுட்பமான மற்றும் நிலைபேறான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

13 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தினூடாக இதுவரையில் களுத்துறை, குருவிட்ட, கெஹேல்பன்னல, மொனராகலை, மதுரங்குளி, கந்தப்பளை, குருநாகல், அனுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் திஸ்ஸமஹாராம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 11 பாடசாலைகளுக்கு ஆய்வுகூடங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கிராமிய மட்டத்தில் டிஜிட்டல் அறிவை மேம்படுத்துவதற்கான தேவைகளை இனங்கண்டிருந்ததைத் தொடர்ந்து, நாடு முழுவதிலும் மேலும் 20 ஸ்மார்ட் ஆய்வுகூடங்களை நிறுவும் பணிகளை துரிதப்படுத்த CDB தீர்மானித்தது. இந்தத் திட்டத்தினூடாக, இளைஞர்களுக்கு தொழில்நுட்பத்தை அணுகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கின்றது.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் 4ஆவது அம்சமான தரமான கல்வி என்பதை மையப்படுத்தி இந்தத் திட்டம் அமைந்துள்ளதுடன், தரமான கல்விக்கு நவீன தொழில்நுட்பத்தை அணுகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும், தேசத்தின் இளைஞர்கள் மத்தியில் டிஜிட்டல் அறிவை கட்டியெழுப்புவதும் எமது இலக்காக அமைந்துள்ளது.

இந்த ஆய்வுகூடங்களின் முதலாவது தொகுதி, கொலன்னாவ புனித சூசையப்பர் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த குருவிதென்ன மகா வித்தியாலயம் மற்றும் அட்டபாகே உடுகம மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நிறுவப்படும். இவை நவம்பர் மாதத்தில் செயற்பட ஆரம்பிக்கும். கல்வி அமைச்சுடன் இணைந்து விசேட திட்டத்தின் அடிப்படையில் தேவைகளைக் கொண்ட பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

CDB இன் பிரத்தியேகமான நிலைபேறான வலுவூட்டல் மற்றும் அறிவை பகிரும் நடவடிக்கைகளினூடாக நாட்டின் ஒவ்வொரு குடிமக்களுக்கும் வாய்ப்புகள் தோற்றுவிக்கப்படுகின்றன. கிராமிய மட்டத்தில் இளைஞர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவது மாத்திரமன்றி, மனநிலைகளை வியாபிப்பது, ஜீவனோபாய சாதனங்களை பேணல் மற்றும் தொழில்நிலை வாய்ப்புகளை ஆரம்பிப்பது போன்றவற்றினூடாக இளைஞர்கள் மத்தியில் உயர்ந்த நிலைக்கு செல்வதற்கு ஊக்குவிப்பதாக அமைந்திருக்கும்.

ஐதராபாத்

# அதிகம் கவலை தேவை இல்லை

கொரோனாவின் பிறப்பிடமான சீனாவில் தற்போது ‘பிஎப்.7’ எனப்படும் புதிய வகை உருமாறிய கொரோனா மக்களை ஆட்டிப்படைக்கிறது.

சீனாவில் பெரும் அச்சுறுத்தலாக உருவாகி இருக்கும் இந்த வகை கொரோனா அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பிற நாடுகளிலும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. இந்த பிஎப்.7 கொரோனா இந்தியாவிலும் கண்டறியப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

குறிப்பாக குஜராத், ஒடிசா மாநிலங்களில் இந்த தொற்றின் இருப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது. எனவே இதை கட்டுப்படுத்த மத்திய-மாநில அரசுகள் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கி விட்டு வருகின்றன. குறிப்பாக



பிரதமர் மோடி நேற்று முன்தினம் உயர்மட்ட ஆலோசனை நடத்தி தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளார்.

ஆனால், இந்த கொரோனா குறித்து இந்தியா அதிகம் கவலை கொள்ளத்தேவை இல்லை என புகழ்பெற்ற மருத்துவ விஞ்ஞானியும், பெங்களூரு டாடா மரபணு இன்ஸ்டியூட் நிறுவன இயக்குனருமான ராகேஷ் மிஸ்ரா கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறியிருப்பதாவது: - இந்த புதிய வைரஸ், ஒமைக்ரானின் ஒரு துணை மாறுபாடு ஆகும். சில சிறிய மாற்றங்களைத் தவிர முக்கிய அம்சங்கள் அனைத்தும் ஒமைக்ரான் போன்று இருக்கும், பெரிய வித்தியாசம் இல்லை. நம்மில் பெரும்பாலானோர் ஒமைக்ரான் அலையை கடந்து வந்திருக்கிறோம். அடிப்படையில் இதுவும் அதே வைரஸ்தான். எனவே இந்த புதிய வைரஸ் குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

இந்தியர்கள் இருவகையான நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுள்ளனர். அதாவது தடுப்பூசிகள் மூலம் உருவாக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் கொரோனா உள்ளிட்ட பல்வேறு தொற்றுகளிலிருந்து பாதுகாக்கும் என்றார்.

மும்பை

# பேரக்குழந்தைகளை வரவேற்றார் அம்பானி

இந்தியாவின் பிரபல தொழிலதிபரான முகேஷ் அம்பானி - நீடா அம்பானியின் ஒரே மகளான இஷாவுக்கு கடந்த 2018ம் ஆண்டு டிசெம்பர் 12ம் திகதி திருமணம் நடைபெற்றது.

இந்தியாவின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான பிரமல் ரியால்டி நிறுவனத்தின் தலைவர் அஜய் பிரமல் - ஸ்வாதி பிரமல் தம்பதியரின் மகனான ஆனந்த் பிரமலை அவர் மணம் முடித்திருந்தார்.

கருவுற்ற இஷாவுக்கு அமெரிக்காவில் கடந்த நவம்பர் 19-ம் திகதி இரட்டைக் குழந்தை பிறந்தது. ஒரு பெண், ஒரு ஆண் என பிறந்த இரட்டைக் குழந்தைகளில் பெண் குழந்தைக்கு ஆதியா என்றும், ஆண் குழந்தைக்கு கிருஷ்ணா என்றும் பெயர் சூட்டப்பட்டது.

அமெரிக்காவிலேயே இருந்து வந்த இஷா, குழந்தை பிறந்த பிறகு முதல்முறையாக கணவர் மற்றும் இரு குழந்தைகளுடன் மும்பை வந்தார். அவரையும் குழந்தைகளையும் வரவேற்கும் விதமாக மும்பையில் உள்ள முகேஷ் அம்பானியின் மாளிகை அலங்கரிக்கப்பட்டிருந்தது.



ராஞ்சி

# இளைஞனின் வயிற்றுக்குள் இனப்பெருக்க உறுப்புகள்

ஜார்க்கண்ட்டின் குட்டா மாவட்டத்தில் வாலிபர் ஒருவருக்கு நீண்ட நாட்களாக வயிற்று வலி இருந்து வந்துள்ளது. இதற்கு சிகிச்சை பெற டாக்டரிடம் சென்றுள்ளார்.

அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் அல்ட்ராசவுண்ட் சோதனை செய்ய வேண்டும் என கூறியுள்ளனர். தொடர்ந்து பல முறை இந்த சோதனையை செய்தபின்னர், ஹெர்னியா எனப்படும் குடலிறக்க பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

அதனால், அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் சிறுவயதில் இருந்தே அப்படி உள்ளது என அவரிடம் கூறியுள்ளனர். இதன்பின்பு, டாக்டர்கள் அவருக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளனர்.

அப்போது, வாலிபரின் உடலுக்குள் முழு அளவில் வளர்ச்சி அடைந்த பெண் இனப்பெருக்க உறுப்புகள் காணப்பட்டு உள்ளன. கருப்பை, அதற்கான குழல் உள்ளிட்ட பல்வேறு உறுப்புகளும் உடலின் உள்ளே வளர்ந்து இருந்துள்ளன.

இதுபற்றி டாக்டர் தாரா சங்கர் ஜா கூறும்போது, கோடிக்கணக்கானோரில் ஒருவருக்கு இதுபோன்று ஏற்படும். இதன்படி, ஒரே நபருக்கு ஆண் மற்றும் பெண் உள்ளுறுப்புகள் காணப்படும்.

இந்த அறுவை சிகிச்சையில் அவரின் அனைத்து பெண் இனப்பெருக்க உறுப்புகளும் உடலில் இருந்து நீக்கப்பட்டு விட்டன. அந்த வாலிபர் தற்போது உடல்நலமுடன் உள்ளார் என கூறியுள்ளார்.

புதுடெல்லி

# 24 மணி நேரமும் 7 நாட்களும் வெறுப்புணர்வு பரப்பப்படுகிறது

ராகுல்காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரையான இந்திய ஒற்றுமை பயணம் இன்று டெல்லியை அடைந்துள்ளது. தமிழ்நாட்டின் கன்னியாகுமரியில் தொடங்கிய ராகுல்காந்தியின் பயணம் புதுடெல்லியை அடைந்துள்ளது.

இந்த பேரணியில் ராகுல்காந்தியுடன் மக்கள் நீதி மய்யம் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் இணைந்தார்.

இந்நிலையில், இந்திய ஒற்றுமை யாத்திரையின் ஒரு பகுதியாக புதுடெல்லியில் உள்ள செங்கோட்டையில் நடந்த நிகழ்ச்சியில் ராகுல்காந்தி பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது: - உண்மையான பிரச்சினையில் இருந்து உங்களை திசைதிருப்ப பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) 7 நாட்களும் 24 மணி நேரமும் (24x7) இந்து - முஸ்லிம் மதத்தினர் இடையே வெறுப்பு பரப்புகிறது..

நான் 2 ஆயிரத்து 800 கிலோமீட்டர் நடந்து வந்துள்ளேன். ஆனால், எந்த வெறுப்பையும் பார்க்கவில்லை. தொலைக்காட்சியில் நான் வன்முறையை பார்க்கிறேன். ஊடகம் ஒரு நண்பன். ஆனால், பின்னால் இருந்து உத்தரவுகள் வருவதால் அவை நாங்கள் பார்த்த உண்மை பக்கத்தை அவை காட்டுவதில்லை’ என்றார்



லக்னோ

# கருணை கொலை செய்யுங்கள்

தனது இரண்டாவது கணவர் மற்றும் அவரது மகனால் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்ட தன்னை கருணை கொலை செய்ய வேண்டும் என உத்தரப் பிரதேச மாநிலம் பிலிபிட் பகுதியை சேர்ந்த 30 வயது பெண்மணி ஒருவர் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் தன்னை கருணை கொலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, “கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் சண்டிகரை சேர்ந்தவரை நான் விவாகரத்து செய்தேன். பின்னர் இரண்டாவது திருமணம் செய்துகொண்டேன். தற்போதுள்ள கணவருக்கு ஏற்கெனவே மகன் இருக்கிறார். இந்நிலையில் நாட்கள் செல்ல செல்ல கொடுமைகள் தொடங்கின.

அவரது மகன் என்னிடம் தவறாக நடந்துகொள்ள முயன்றான். நான் எவ்வளவோ தடுத்தும் என்னை கட்டயாப்படுத்தி பாலியல் பலாத்காரம் செய்தான். இந்த விவகாரம் வெளியில் தெரிந்தால் பிரச்சினையாகிவிடும் என்றும், வீட்டை விட்டு துரத்தப்படுவேன் எனவும் அவன் மிரட்டல் விடுத்திருந்தான். நாளடைவில் இது தொடர்கதையானது. விளைவாக நான் கர்ப்பமடைந்துவிட்டேன்.

பின்னர் நீதிமன்றத்தை நாடி அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய அனுமதி பெற்றேன். இதனையடுத்து கடந்த 9ம் திகதி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் தற்போது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. நான் இப்போது எனது தாய் மற்றும் சகோதரனுடன் வசித்து வருகிறேன். இந்த கொடுமையை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நீதியின் மீதான நம்பிக்கையும் போய்விட்டது. எனவே என்னை கருணை கொலை செய்திட தாங்கள் அனுமதிக்க வேண்டும்" என்று அதில் கூறியுள்ளார்.




பங்களாதேஷுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இந்தியா

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இந்தியா ஏற்கெனவே வென்ற நிலையில், மிர்பூரில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என்ற ரீதியில் தொடரை இந்தியா கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 227/10 (துடுப்பாட்டம்: மொமினுல் ஹக் 84 ஓட்டங்கள். பந்துவீச்சு: உமேஷ் யாதவ் 4/25, இரவிச்சந்திரன் அஷ்வின் 4/71, ஜெய்டேவ் உனத்கட் 2/50)

இந்தியா: 314/10 (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 93, ஷ்ரேயாஸ் ஐயர் 87 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 4/74, ஷகிப் அல் ஹஸன் 4/79, தஸ்கின் அஹ்மட் 1/58, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/61)

பங்களாதேஷ்: 231/10 (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 73, ஸகிர் ஹஸன் 51, தஸ்கின் அஹமட் ஆ.இ 31, நுருல் ஹஸன் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 3/68, மொஹமட் சிராஜ் 2/41, இரவிச்சந்திரன் அஷ்வின் 2/66, ஜெய்டேவ் உனத்கட் 1/17, உமேஷ் யாதவ் 1/32)

இந்தியா: 145/7 (துடுப்பாட்டம்: இரவிச்சந்திரன் அஷ்வின் ஆ.இ 42, அக்ஸர் பட்டேல் 34, ஷ்ரேயாஸ் ஐயர் ஆ.இ 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 5/63, ஷகிப் அல் ஹஸன் 2/50)

போட்டியின் நாயகன்: இரவிச்சந்திரன் அஷ்வின்

தொடரின் நாயகன்: செட்டேஸ்வர் புஜாரா




## கிழக்கு மாகாண கராத்தே வர்ண விருது வழங்கும் விழா

■ எம்.என்.எம். அப்ராஸ்

அங்கீகரிக்கப்பட்ட தேசிய, சர்வதேச கராத்தே போட்டிகளில் கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரைக்குமான காலப் பகுதியில் பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு வர்ண விருது வழங்கும் விழா கிழக்கு மாகாண கராத்தே சம்மேளன தலைவர் முகம்மது இக்பால் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், கிழக்கு மாகாணம் சார்பாக வெற்றி பெற்ற 82 வீரர்களுக்கு வர்ண விருது வழங்கப்பட்டதுடன், கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தில் நீண்ட காலங்களாக சேவையாற்றி வருகின்ற சிரேஷ்ட போதனாசிரியர்கள் ஐந்து பேருக்கு அதி சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டதுடன், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றுத் தந்த சங்கங்களின் எட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு விசேட பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் IMA, RKO ஆகிய சங்கங்களின் மாணவர்களால் கராத்தே நிகழ்ச்சி கண்காட்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில்

## நத்தார் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்

■ எஸ்.கே. குமார்

நத்தார் தின பண்டிகையை முன்னிட்டு கடந்த இரண்டு வாரங்களாக நுவரெலியா விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட ஸ்னூக்கர், பிலியட், மேசைப்பந்து போட்டிகளின் இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு வைபவமும் நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அருணசாந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நேற்று முன் தினம் மாலை நுவரெலியா விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

36 விளையாட்டு வீரர்கள்



பங்குபற்றிய ஸ்னூக்கரின் இறுதிப் போட்டியில், 36 - 29 என்ற புள்ளிகள் கணக்கில் எம். குணரட்ணவை வென்று பெரியசாமி சுப்பிரமணியம் சம்பியனானார்.




டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கிறது:

## நியூசிலாந்தை வீழ்த்துமா பாகிஸ்தான்?

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, கராச்சியில் இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இங்கிலாந்து அணியால் வெள்ளையடிக்கப்பட்ட நிலையில், பாகிஸ்தான் அணியானது உடனடியாக சுதாகரித்துக் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக துடுப்பாட்டத்தில் பலத்தளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ள நிலையில் சிரேஷ்ட வீரர்களான மொஹமட் றிஸ்வான், ஷண் மசூட்டிடமிருந்து மேம்பட்ட பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கமான கேன் வில்லியம்ஸன் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ள இந்த முதலாவது டெஸ்ட் தொடரில், டிம் செளதி எவ்வாறு செயற்படப் போகின்றார் என்பது நிச்சயம் அவதானிக்கப்படும்.

அஜாஸ் பட்டேலுடன் இரண்டாவது சுழற்பந்துவீச்சாளராக விக்கெட்டுகளைக் கைப்பற்றக்கூடிய இஷ் சோதி அணியில் இணைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, வில்லியம்ஸன், டொம் லேதம், ஹென்றி நிக்கொல்ஸ், டெவொன் கொன்வே, டரைல் மிற்செல், டொம் பிளன்டலிருந்து தொடர்ச்சியான துடுப்பாட்டப் பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படும்.

வொஷிங்டன்:

## வாட்டுகிறது பனிப்புயல்



வட அமெரிக்காவில் வீசும் பனிப் புயலால் அமெரிக்கா மற்றும் கனடாவில் சுமார் 25 கோடி பேர் பனிப்பொழிவின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். இதுவரையிலும் 12 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

கடந்த 40 ஆண்டுகளில் இதுதான் மிகவும் மோசமான கிறிஸ்துமஸ் குளிர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் கொண்டாட வேறு ஊர்களுக்கு சாலை மற்றும் வான் வழியாக பயணிக்கும் கோடிக் கணக்கானவர்களின் பயணம் தடைபட்டுள்ளது.

சுமார் 20 கோடி மக்களுக்கும் மேல் வாழும், பாதிக்கும் மேலான அமெரிக்க மாகாணங்களுக்கு தீவிர வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் 15 இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளிக்கிழமை மட்டும் ஆயிரக் கணக்கான விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. டெக்சாஸ் முதல் க்விபெக் வரையில் சுமார் 3,200 கி.மீ. வரையிலும் பனிப்புயல் வீசுகிறது. வளிமண்டல அழுத்தம் திடீரென குறைந்ததால் எழுந்த பனிப்புயல், அமெரிக்கா - கனடா எல்லையில் உள்ள ஏரிகளை உறையச் செய்துள்ளது.

## உச்சபட்ச வேகமாக கொரோனா பரவுகிறது

சீனாவின் உகான் மாகாணம் ஹூபேய் நகரில் கடந்த 2019 டிசம்பர் மாதம் கண்டறியப்பட்டது. அதன் பின்னர் உலகம் முழுவதும் பரவிய கொரோனா லட்சக்கணக்கான மக்களின் உயிரை பறித்தது. இந்த கொடூர வைரசுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து வைரஸ் பாதிப்பு, உயிரிழப்பு பெருமளவு குறைந்துள்ளது. அதேவேளை, கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து பரவத்தொடங்கி வருகிறது.

சீனாவில் ஆரம்பம் முதலே பாதிப்பு, உயிரிழப்பு எண்ணிக்கையில் உலக நாடுகளுக்கு சந்தேகம் எழுந்து வருகிறது. கடுமையான ஊரடங்கு நடைமுறைகள், 'பூஜ்ஜியம் கொரோனா' கொள்ளை உள்பட கடுமையான கட்டுப்பாடுகள் சீனாவில் அமல்படுத்தப்பட்டன.

கொரோனா பரவத்தொடங்கியது முதல் இந்த கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால், தடுப்பூசி கண்டுபிடிப்பு காரணமாக கொரோனா வைரஸ் தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.



## ஐ.நா.வில் இந்தியாவுக்கு கடுமையான பாராட்டு

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தரமற்ற உறுப்பினர் பதவிக் காலத்தில், இந்தியா மிகச் சிறப்பாக செயல்பட்டதாக உறுப்பு நாடுகள் பாராட்டு தெரிவித்தன.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தரமற்ற உறுப்பினராக இந்தியா 2 ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. தற்போது தனது பதவிக்காலத்தை இந்த மாதத்துடன் நிறைவு செய்தது. இந்த 2 ஆண்டு காலத்தில் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலுக்கு இந்தியா இரண்டு முறை மாதாந்திர தலைமை பொறுப்பையும் ஏற்றது. சுழற்சி முறையில் வரும் இந்த பொறுப்பை கடந்தாண்டு ஒகஸ்ட் மாதத்திலும், இந்த ஆண்டு டிசெம்பரிலும் இந்தியா ஏற்றது.

இந்நிலையில் ஆண்டு இறுதி வார விடுமுறைக்கு முன்பாக, ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் கூட்டம் கடந்த வியாழக் கிழமை நடந்தது. அதில் இந்த மாதத்தில் இந்தியா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருச்சிரா கர்போஜ் எடுத்துரைத்தார்.

சீர்திருத்தம் செய்யப்பட்ட பலதரப்பு விஷயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து இயக்கம் மற்றும் கடந்த வாரம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தலைமையில் நடந்த தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை, ஐ.நா.வில் மகாத்மா காந்தி மார்பளவு சிலை திறந்து வைத்தது, அமைதிப்படைக்கு எதிரான குற்றங்களை தடுக்க நண்பர்கள் குழுவை தொடங்கியது போன்றவற்றை அவர் சுட்டிக் காட்டினார்.

காபூல்,

## என்ஜிஓவில் பெண்கள் பணிபுரிய தடை



ஆப்கானிஸ்தானில் ஒரு ஆண்டுக்கும் மேலாக ஆட்சி செய்துவரும் தலிபான்கள் அந்நாட்டு மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

குறிப்பாக, அந்த நாட்டின் பெண்கள் பாலின பாகுபாட்டால் பல சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆப்கானிஸ்தான் பல்கலைக்கழகங்களில் பெண்கள் படிப்பதற்கு தலிபான்கள் இடைக்கால தடை விதித்தனர். அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் இந்த உத்தரவு செல்லும். அடுத்த உத்தரவு வரும் வரை இது அமலில் இருக்கும்.

பாரிஸ்,

## தொடர் கொலைகாரன் நாடு கடத்தப்பட்டான்



நேபாள நாட்டில் 2 வெளிநாட்டு பெண்களை கொலை செய்த வழக்கில் அங்கு ஆயுள் தண்டனை பெற்றிருந்த தொடர் கொலைகாரன், சார்லஸ் சோப்ராஜ் (வயது 78). இந்நிலையில் அவனது முதுமையை கருத்தில்கொண்டு விடுதலை செய்து நேபாள உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அதைத் தொடர்ந்து காத்மாண்டு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட சோப்ராஜ், கத்தார் வழியாக பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் சென்றடைந்தான்.

பிரான்சில் உள்ள சோப்ராஜின் வக்கீல் இசபெல் கவுட்டன்ட் பெயர், 'சுதந்திரம் பெற்றதில் சோப்ராஜ் மகிழ்ச்சியாக உள்ளார். அவர் இனி ஓய்வெடுப்பார்' என்று கூறினார்.

சோப்ராஜின் வாழ்க்கையின் அடிப்படையிலான ஒரு திரைப்படத்தையும், நூலையும் வெளியிடும் பிரான்ஸ் சினிமா தயாரிப்பாளர் ஜீன் சார்லஸ் டெனியு, 'சோப்ராஜ் நலமாக இருக்கிறார்.

பாரீசிலும், வேறு சில இடங்களிலும் அவர் வசிப்பார்' என்றார். இதற்கிடையில், நேபாளத்தில் ஆயுள் தண்டனையில் இருந்து சார்லஸ் சோப்ராஜ் விடுதலை பெற்றுவிட்டாலும், அவன் மீது பிரான்சில் சட்ட நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுமா என்பது குறித்து அந்நாட்டு அரசு கருத்து தெரிவிக்கவில்லை.

மாஸ்கோ:

## மறைமுக போர் நடத்துகிறது அமெரிக்கா



"உக்ரேன் மீதான போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறோம். ஆனால், ரஷ்யா மீது அமெரிக்கா மறைமுக போர் நடத்தி வருகிறது" என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றம் சாட்டி உள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் இணைய உக்ரைன் முடிவெடுத்தது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளுடன் உக்ரேன் நெருக்கம் காட்டியது. இந்த நடவடிக்கைகளால் தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறி, உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடங்கியது. உக்ரேன் - ரஷ்யா போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், திடீரென அமெரிக்கா சென்று அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்தார் உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி. இது சர்வதேச அளவில் பரபரப்பானது.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கூறியதாவது: உக்ரேன் மீது போரை முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறேன். விரைவில் திருப்தி கரமான வகையில் போருக்கு முடிவு காணப்படும். ஆனால், உக்ரேன் (அதிபர் ஜெலன்ஸ்கி) அதை விரும்பவில்லை. அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்து ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. நாங்கள் சொல்லும் விஷயங்களை உக்ரேன், அமெரிக்கா ஆகிய 2 நாடுகளும் காது கொடுத்து கேட்கவில்லை. உக்ரேனைப் பயன்படுத்தி ரஷ்யா மீது தாக்குதல் நடத்தி எங்களை பலவீனப்படுத்த அமெரிக்கா முயற்சி செய்து வருகிறது. உக்ரைனை போர்க் களமாக பயன்படுத்தி வருகிறது அமெரிக்கா. உக்ரேன் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி புரிந்து கொண்டால் நன்றாக இருக்கும். இவ்வாறு புட்டின் கூறினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை 26 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.